www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# தளிர்

தை - பங்குனி - 1985
விலை 4 ரூபா

மக்களின் ஜனநாயகத்திற்காக போராடுகின்ற நாங்கள்

மக்களுக்கான ஜனநாயகத்தினை கைவிட்டுப் போராடலாமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

786

THE FAMOUS STORES

DEALERS IN FOOT WEAR & FANCY - GOODS

17, Kasturiar Road
JAFFNA.

“பிரான்ஸ் வாழட்டும் என்பதற்காக நான் இறக்கிறேன்”

- மரணத்திற்கு முன் பிரான்ஸ் புரட்சிவாதி
கப்ரியல் பேரி -

வாசகன்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிழைதிருத்தம்; பக்கம் 11ஐ 15எனவும், 15ஐ 11எனவும் வாசிக்கவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தளிர்

திரன்: 2 இல: 6

தை—பங்குனி 1985

விலை ரூபா 4/

## உள்ளே

★ மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளும் விடுதலை இயக்கங்களின் பொறுப்பும்

★ மாணவ சமுதாயமும்—போராட்டமும்

★ தென்மராட்சி மக்களின் வாழ்வும் பரிதாபகரமான அகதி நிலைமையும்.

★ தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழ போராட்டமும், சோஷலிசத்துக்கான பாதையும்.

★ தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

★ அதிகாரம் புரியாத சமன்பாடு

★ மேற்கு சாகாரவின் விடுதலைப் போராட்டம் தொடர்-2

★ தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள்.

★ போராட்டத்தில் பெண்கள்-ஒரு கண்ணோட்டம்.

## தொடர்புகட்கு

'தளிர்'
ஆசிரியர் குழு,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## வாசகர்களுக்கு!

தளிர் பற்றியும் உள்நாட்டு-வெளி நாட்டு விடயங்கள் பற்றியும் உங்களுடைய கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்

## மக்களுக்கு வழிகாட்டுவது யார்?

'அகதிகள் பிரச்சனை' என்பது இன்று சகஜமாகி விட்டது. இவர்களில் சொந்த மண்ணில் அகதிகளாக இருப்பவர்கள் ஒரு பகுதியினர் இந்தியாவை நோக்கி அகதிகளாகச் செல்பவர்கள் இன்னொரு பகுதியினர். 1983 கலவரத்தின் போது கொழும்பில் பாதிக்கப்பட்ட வசதி படைத்த மக்கள் தமது உடமைகளோடும் தமது நாகரீக நாய்க்குட்டி, அவற்றுக்கான பிஸ்கற்றோடும் விமானம் மூலம் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர் கடந்த இரு மாதங்களுக்குள் 85000 க்கும் அதிகமானோர் அகதிகளாக இந்தியாவை நோக்கிச் சென்றுள்ளனர்.

இலங்கை அரசுக்கு சவாலாக கடல் பாதுகாப்பையும், கடற்படையின் ரோந்துக் கண்காணிப்பையும்தாண்டி அகதிகளாகச் செல்கின்றனர் இவர்களில் பெரும்பாலானோர் மீன் பிடியை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்ட கரையோர மக்களாவர்' இந்த மண்ணிலிருந்து மண்ணின் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காது ''தப்பித்துச்'' செல்ல வேண்டும் என்ற உணர்வுடன் படகுகளில் ஏறுகின்றனரென்றால் காரணமென்ன உயிருக்கான உத்தரவாதமின்மையும் உயிர்வாழ்வதற்கான உத்தரவாதமின்மையுமே! இப்பிரச்சினையைச் சாட்டாக வைத்து இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்துவது கையாலாகாத்தனமே!

முல்லைத்தீவுப்பகுதியில் சுமார் 16 முகாம்களில் பல்லாயிரம் மக்கள் தமது உறைவிடம், உடமை, உற்றார் சகோதரரை இழந்து தமது எதிர்காலத்தைக் கேள்விக் குறியுடன் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இதுவரை காலமும் இவர்களுக்கு உடைகளையும் அரிசிகளையும், சேகரித்துக் கொடுத்தோமே ஒழிய இவர்களுடைய மறுவாழ்வுக்காக என்ன செய்தோம்?

இன்று நடப்பது தமிழ்மக்களுடைய உரிமைப் போராட்டம் இப்போராட்டத்தில் இவர்களையும் பங்குபற்றவைக்காது மாறாக இந்தியாவிற்கு தப்பிச்செல்வதற்கும் முகாம்களில் அகதிகளாக பார்வையாளராக இருப்பதற்கும்என்னகாரணம்?

இவர்கள் படும் அவலநிலையிலிருந்து இவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டி, இவர்களை போராட வைப்பது யார்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளிர் | தகவற் சேவை

## வடக்கில் இளைஞர்களைக் கைதுசெய்து தெற்கில் குடியமர்த்துவதற்கான திட்டம் ஓர் தேசிய இன ஒழிப்பாகும்

தமிழீழ விடுதலைப் பேராட்டத்தை நசுக்குவதற்கு சிங்கள இனவாத அரசு பல வழிகளைக்கையாள்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் செறிவாய் வாழ்ந்தாற்தான் தமிழீழப் போராட்டமென்பது நிலவ முடிகிறதென்றும் எனவே தமிழரின் அத்தகைய சனச் செறிவை இல்லாது செய்வதே அவசியமென்றும் அதனை இல்லாது செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்றும் அரசு முடிவுசெய்துள்ளது. இந்தவகையில் தமிழ்மக்களின் சனச்செறிவை இல்லாது செய்வதற்கு அரசு மூன்றுவழிகளைக்கையாள்கிறது. அவையாவன......

(1) வடக்கிலிருந்து தமிழ் மக்களை அகதிகளாகத் துரத்துவது

(2) வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது.

(3) தமிழ் இளைஞர்களைக் கைது செய்து தெற்கில் குடியமர்த்துவது என்பதாகும்.

இளைஞர்களைக் கைதுசெய்து தெற்கில் குடியமர்த்துவதற்கான ''லலித்'' தின் திட்டத்தை இலங்கை வானொலி முதல்முறையாக 19-3-85 அன்று இரவுச்செய்தியில் அறிவித்தது. மலேசியாவில் 1947ம் ஆண்டு உருவாகிய ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்கு தளபதி பிறிக்ஸ் (Briggs) என்பவரால் உருவாக்கப்பட்ட பிறிக்ஸின் திட்டம் எனஅழைக்கப்படும் மீள்குடியமர்வுத் திட்டத்தைப் போன்றதே இந்த லலித்தின் திட்டமுமாகும் (மலேசியாவில் இடம் பெற்ற ஆயுதப்போராட்டம்) பற்றியும் அதனை எடுக்க அரசு மேற்கொண்டிருந்த பல்வேறு திட்டங்களையும் உள்ளடக்கிய கட்டுரை ஒன்று வைகாசி-ஐப்பசி84இல் வெளியான தளிரில் வெளியாகிஇருந்ததைப் பார்க்கலாம்)

மலேசியாவில்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை அவர்கள் வாழ்ந்த பிராந்தியத்திலிருந்து குடியெழுப்பி அவர்களின் ஊர், உறவு, தொடர்பு என்பவற்றையெல்லாம் குழப்பி வேறொரு பிராந்தியத்தில் வெவ்வேறாய் தொடர்பறுத்துக் குடியமர்த்தினான் பிறிக்ஸ். மனிதகுல வரலாற்றில் ஓர் கறை படிந்த செயலை மிக அநாகரிகமான முறையில் பிறிக்ஸ் நிறைவேற்றினான் அதே போன்ற செயலுக்கே இன்று லலித்தும் திட்டமிட்டுள்ளான். லலித்தின் இத்திட்டம் பிறிக்ஸ் திட்டத்தை' விடச் சற்று நுட்பமானதும் கொடூரமானதுமாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்பதன் பெயரில் அவர்களை அவர்களது மண்ணிலிருந்தும் வாழ்விலிருந்தும் பிடுங்கியெடுத்து தெற்கில் குடியமர்த்துவதன் மூலம் அவர்களைப் போராட்டத்திலிருந்து பிரித்து போராட்டத்தை பலவீனப் படுத்தி விடலாமென்பதே லலித்தின் எண்ணமாகும் இவ்வாறு தெற்கில் குடியமர்த்தப்படும் இளைஞர்கள் வடக்குக்கு வரமுடியாதென்றும் ஆனால் அவர்கள் வடக்கிலிருந்து தனக்குத் தேவையான வாழ்க்கைத்துணைவியையோ அன்றி சேர்ந்து வாழ்வதற்கான உறவினர்களையோ அழைத்து அங்கு குடியமர்த்தி வாழ்வதற்கு இத்திட்டம் வகைசெய்யுமென்பது எதிர்பார்க்கக்கூடியதே. இதன் மூலம் தமிழ்ப்பகுதியிலிருந்து ஒரு பகுதி மக்கள் தெற்குக்கு குடிநகர்த்தப்பட்டு விடுவர் இவ்வாறுசெய்து தமிழ் மக்களின் பிரதேசத் தனித்துவத்தையும் அறுத்து அவர்களின் தேசிய தனித்துவத்தைக் கரைத்து 'காலகதியில் சிங்களமயமாக்கி விடலாமென்பது அவனது திட்டம்

பிறிக்ஸ்முழுமக்களையும்ஓர் பிராந்தியத்திலிருந்து இன்னோர் பிராந்தியத்திற்கு பலவந்தமாக அள்ளிச்சென்றான். ஆனால் லலித் மக்களின் ஒரு பகுதினராகிய இளைஞர்களைப் ''பயங்கரவாதிகள்' என்பதன் பெயரில் பலாத்காரமாக தெற்குக்கு கொண்டு செல்ல அந்த இளைஞர்களை நாடிஒரு பகுதித் தமிழ் மக்கள் தெற்கிற்குவாழச் செல்வார்கள்இந்தவகையில் பிறிக்ஸின் திட்டத்தைவிடலலித்தின் கொடிய திட்டம் சற்று நுட்பமாக்வுள்ளது

இவ்வாறான ஓர் உதாரணம் மனித குல வரலாற்றில் தோன்ற நாம் இடமளிக்கக்கூடாது இதனைத்தோன்றவிட்டால் உலகவரலாற்றில் இவ்வாறான கொடிய நடவடிக்கைகள் தோன்றி ஏனைய பகுதிகளிலும் எதிர்காலத்தில் பல்வேறு பிற்போக்காளர்களாலும் அமுல்படுத்தப்படும் இந்த வகையில் எங்களுக்கு ஓர் உலகப்பொதுமையான கடமையும் இருக்கிறது எனவே இதனையிட்டு அனைவரும் உருப்படியாக ஏதாவது சிந்திப்போமா-! அல்லது ..........?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளும் விடுதலை இயக்கங்களின் பொறுப்பும்

-அஞ்சலி

தமிழ் மக்கள் மீதான அரசின் வன்முறை நடவடிக்கைகளுக்கு எதிராக, மேற்கொள்ளப்பட்ட ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் போராட்டங்கள் தமிழ்ப்பகுதிகளில் அதிகரித்துள்ளன. அரசாங்கம் இதனை உள்நாட்டுப் போராகக் கருதுமளவிற்கு நெருக்கடிகள் பெருகியுள்ளன. நெருக்கடிக் காலத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாக உள்ளது. உணவு, பொருளாதாரம், சமூக நலன் ஆகிய விடயங்களில் காணப்படும் சிக்கலான பிரச்சனைகள் அடிப்படையானவை மட்டுமன்றி, எதிரியினால் இலகுவில் கருவியாகப் பாவிக்கக் கூடிய அபாயகரத் தன்மை கொண்டவையாகும். தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே இலக்காகக் கொண்ட இளைஞர் இயக்கங்கள் கருத்து முரண்பாடுகளுக்கும் அப்பால், இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் பொறுப்புள்ளவராக நடந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

அடக்கு முறை நடவடிக்கையின் போதும் நெருக்கடிகளின் போது மக்களுக்கு ஏற்படும் பிரதான பிரச்சனை உணவு பற்றியதாகும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் திட்டமிட்டுக் கையாளப் படுமிடத்து தன்னிறைவு காணப் போதுமானதாகும். யாழ் குடாநாட்டை தனியாக எடுத்து நோக்கும் பட்சத்தில் இங்கு வாழும் மக்கள் தற்போதைய நிலையில் அரிசி மா போன்ற அடிப்படை உணவுப் பொருட்களுக்குப் பிற பகுதிகளை எதிர் பார்க்க வேண்டிய அவசியமுள்ளது. தனிமைப் படுத்தல் என்ற தந்திரத்தின் மூலம் அரசு தீவின் பிறபகுதிகளில் இருந்து உணவுப் பொருட்கள் வருவதைத் தடை செய்வது இலகுவானதாகும். இவ்வேளையில் கூடுதலான அளவுக்கு உணவுத் தானியங்களைப் பயிரிடுதல் மூலம் நிலைமைகளைச் சமாளிக்க முடியும். தரிசு நிலங்களை வளம் படுத்திப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தல் முக்கியமான வழிவகை எனலாம். இத்துடன் திராட்சை, வெங்காயம், மிளகாய், வாழை போன்ற உணவுப் பொருட்களை எம்மக்கள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். அவை தீவின் பலபகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. அத்தகைய பொருட்கள் நெருக்கடி கால கட்டங்களில் பாதிப்படைவதைத் தவிர்பதற்கு அப்பயிர்கள் வளரும் வளமான நிலங்களில் எமக்குப் பலன் தரக் கூடிய மாற்றுப் பயிர்களைச் செய்வதற்குப் பயன் படுத்துதல் அவசியம் எமது பாரம்பரிய உணவுத் தானியங்களான குரக்கன், சாமை, தினை, எள், சோளம் போன்றவையும் மரவள்ளி, வற்றாளை, போன்ற கிழங்கு வகைகளையும் மக்கள் உற்பத்தி செய்து பயன்படுத்தலாம். முன்னோரின் உணவு வகைகளில் பிரதான இடம் வகித்த பனம் பொருள் உற்பத்திகளையும் பயன் படுத்தப் பழகுதல் வேண்டும். இவை பற்றி மக்களுக்கு தெளிவான விளக்கங்களும், வசதிகளும், வாய்ப்புக்களும் வழங்கப் படின் மக்கள் எதிர் நோக்கக் கூடிய உணவுப் போதாக்குறை பஞ்சம் ஆகிய பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்க முடியும். உணவுப் போதாக் குறை காரணமாக ஏற்படக் கூடிய உணவுப் பதுக்கல், விலைவாசியேற்றம், உணவுப்பங்கீடு போன்ற பிரச்சினைகளை எதிர் கொள்வதிலும் விழிப்பாக இருத்தல் வேண்டும். அத்துடன் மரபுவழி உணவுப் பொருட்களை நவீன முறையில் பதப்படுத்திப் பயன்படுத்தல் வேண்டும்.

அடுத்த படியாக மக்கள் எதிர் நோக்கியுள்ள மிக அடிப்படையான பிரச்சினை அவர்களின் பொருளாதாரக் கட்டமைப்பு அரசினால் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டமை ஆகும். பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்ட பின்னர் கடற்றொழில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கூலிஉழைப்பு, சிறுகைத்தொழில், வியாபாரம் போன்றவையும் நெருக்கடி காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இவர்கள் தாம் உயிர் வாழ்வதற்கு வேண்டிய உற்பத்தி நடவடிக்கைகளிலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் நடவடிக்கைகளிலும் திசை திருப்பப் படல் வேண்டும். எமது விவசாய உற்பத்திகளான திராட்சை, வெங்காயம், மிளகாய் போன்றவை எமது நுகர்வுக்கு வேண்டிய அளவிற்கு உற்பத்தி செய்தல் போதுமானதாகும். வடக்கு கிழக்குப்பகுதிகளில்பயன்படுத்தப்படா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாமல் காணப்படும் பாரிய அளவு நிலங்களில், மூலதனமற்ற மக்கள் கூட்டுறவு அடிப்படையில் கூட்டுப்பண்ணைகள் அமைப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். நெருக்கடிக் காலத்தினைக் கருத்தில் கொண்டு நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு பயன்படுத்தப்படாத நிலங்களை தற்காலிகமாகப் பயிர்செய்கை மேற்கொள்வதற்கு வழங்குவித்தல் வேண்டும். பன்றிவளர்ப்பு கால்நடைவளர்ப்பு, தோழிவளர்ப்பு போன்ற நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபடுத்தப்படல் வேண்டும். அத்துடன் பொருளாதார சிக்கனத்தினைக் கடைப்பிடிக்கக் கூடிய நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் மக்களைப் பழக்கப்படுத்த வேண்டும். உதாரணமாக உயிர்வாயுப்பாவனை சூரியசக்தி பயன்படுத்துதல்என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இன்று வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெரும்பாலும் அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதற்கு காரணம் ஒடுக்குமுறையும் போராட்டமும் ஆகும். எனவே இளைஞர் இயக்கங்கள் மக்களுக்குச் சேவை வழங்கும் ஸ்தாபனங்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலாவது சரியாக இயங்க வைப்பதன் மூலம் மக்களின் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு உதவுதல் வேண்டும். தபால், தொலைத்தொடர்பு, பாடசாலை, போக்குவரத்துச்சேவை, மின்விநியோகம் என்பவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவற்றின் செயற்பாட்டை பாதித்துள்ளதுடன் மக்களின் துரித முயற்சிக்கும் தடைக்கல்லாயுள்ளது. இவை அரசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள போதிலும் மக்களின் அன்றாட வாழ்வுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை நாடுகளில் நெருக்கடிகள் ஏற்படும் பொழுது அத்தியாவசிய சேவைகளர்கப் பிரகடனப்படுத்தப் படுவதன் மூலம் அவற்றின் முக்கியத்துவத்தினை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும். இவற்றிற்கேற்ற பிரதியமைப்புகள் ஏற்படுத்தப்படும் வரையும் மக்களுக்குச் சார்தகமான சேவைகளை வழங்குவதற்கு மேற்கூறப்பட்ட அமைப்புக்களைபேணிப்பாதுகாக்க வேண்டும்.

குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண காலங்களை விட நெருக்கடிக் காலங்களில் பொருட்களை விநியோகம் செய்வதற்கு உகந்த ஓர் அமைப்பாக வுள்ளது. இவற்றினை திறம்பட இயங்குவதற்கு ஒத்துழைப்பு

> '-தமிழ்மக்களின் அவலக்குரல்' என்ற பிரசுரத்திலிருந்து- 'மக்களுக்கு அரசியல் போதனையும் தெளிவும் ஊட்டப்பட்டு போராட்டத்தில் அவர்களின் பங்கு உணர்த்தப் படவேண்டிய பாரிய பொறுப்பை எந்த இயக்கமும் முழுமையாகச் செய்து முடித்ததாகத் தெரியவில்லை. மாறாக, மக்களை குழப்பத்திலும் அறியாமையிலும் ஆழ்த்திவிடு தலையிலேயே விரக்தியுற்று வேதனை மிஞ்சி சொந்த வாழ்க்கையாவது மனிப்போம் எனஅந்நிய பட்டுப் போகும் நிலைக்கு தள்ளி விடுகின்றன"
>
> -தமிழ் மக்கள்

வழங்குவதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவையினை அளிக்கலாம் அது மட்டுமன்றித் திட்டவட்டமான கொள்கைகள்ன்றிப் பாடசாலைப் பகிஷ்கரித்தல், பொதுப் பரீட்சைகளைக் குழப்புதல், பாடசாலை உபகரணங்களைக் கொள்ளையடித்தல் போன்ற நடவடிக்கைகள் நிலவி வருகின்றன. ஆரம்பத்தில் அரசு திட்டமிட்ட அடிப்படையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் முட்டுக்கட்டையிட்டது யாவரும் அறிந்ததே. எமது கல்விப் பாரம்பரியத்தினை அபிவிருத்தி செய்து தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டிய நாம் மேற்கூறியது போன்ற அழிவு நடவடிக்கைகளில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபடுவது வருத்தப்பட வேண்டியதாகும். எனவே இவற்றின் சேவைகளை முடியுமானவரை மக்கள் பயன்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதுடன் மக்களுக்கு இயன்றளவு சேவைகளைப் பெற உதவி செய்தல் வேண்டும்.

இதுவரை காலமும் குற்றத்தடுப்பு, பாதுகாப்பு, நீதிவழங்கல் ஆகிய விடயங்களில் ஈடுபட்டு வந்த பொலிஸ்பிரிவு அடக்குமுறைச் சக்தியாக விளங்கியதால் அவற்றின் மீதான தாக்குதல்கள் நியாயப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் அதன் செயற்பாடும் துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் தமது தனிப்பட்ட, சமூகப் பிரச்சனைகளில் நீதி குற்றத்தடுப்பு, பாதுகாப்பு ஆகிய விடயங்களில் சகல பொறுப்பினையும் போராளிகளிடம் விட்டுள்ளனர். இப் போராளிகள் மக்களின்பிரச்சினைகளை விளங்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாகவும் பொறுப்புணர்வு வாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். உதாரணமாக மக்கள் தமது சாதாரண எல்லைப் பிரச்சினைகளைக்கூட தீர்த்து வைப்பதில் போராளிகளை அணுகுகின்றனர். இவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் காணிப் பிரச்சினைகளை பற்றியும், சிறந்த அறிவினைக் கொண்டிராது இயக்க

(11 ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

 மாணவர் பக்கம்.... மாணவர் பக்கம்....

# மாணவ சமுதாயமும் போராட்டமும்

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமுதாயத்தில் மனித சமூகத்தின் புதிய பரிணமங்களுக்கு பெருமளவு இன்றைய மாணவ சமுதாயமும் காரணமாகும். அண்மைக் காலங்களில் மாணவரமைப்பு பல முக்கியமான மாறுதல்களூடாக வளர்ச்சியடைந்து வருவதினைக் காணக்கூடியதாயுள்ளது.

நீண்ட காலமாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள்மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டிருந்தது. ஆனால் 1970ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மாணவர்கள்மீதான 'தரப்படுத்தல்' முறை அரசினல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டபோது அது பெரும் எரிமலையாக குமுறியது. இதற்கு மாணவர்கள் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனத்தின்கீழ் அணி திரண்டிருந்ததே காரணமாகும். இதனல் மாணவர்கள் முதலாளித்துவப்பிரிவோடுவைத்திருந்த உறவை இழந்து நின்றனர். இந்தப் பிரிவிலிருந்து ஒரு சிலர் பொறுக்கி எடுக்கப்பட்டார்கள். இவற்றுடன் தகுதியடிப்படையில் அரசாங்கம் பதவிகளை வழங்காததால் கல்வி கற்றோர் மத்தியிலுள்ள வேலையற்றோர் எண்ணிக்கையும் அதிகரித்தது.

இத்தகைய நிலைமைகள் மாணவ சமுதாயத்தினரிடையே பிணக்கை உருவாக்கியது. அவர்களுடைய முந்திய சமூக அந்தஸ்தோடு பிணைக்கப்பட்டுள்ள எதிர்பார்த்தலுக்கும் இன்றுமாணவர்கள் முன்புள்ள உண்மையான வாய்ப்புகளுக்குமிடையே இடைவெளி ஏற்படஅவர்கள் முன் உறுதியற்ற எதிர்காலம் காத்திருப்பதிலிருந்து மாணவர்கள் எதிர்ப்பியக்கங்கள் தோற்றம் பெற்றது இத்தகைய விரும்பாத எதிர்காலத்தை தயார் செய்திருக்கும் அமைப்பை எதிர்த்துத் தானுகவே எதிர்ப்பைக் கிளப்பிவிடுகிறது.

★ இன்று மாணவர்கள் தங்கள் சொந்த உரிமைக்காகப் புரட்சிகரமான சக்தியாக மாறிவருகிறார்கள். மாணவர்களின் எதிர்ப்புப் போராட்டமானது குறிப்பிட்ட நடப்புக்கால கருத்துப் போக்குகளை பிரதிபலிக்கிறது.

**அமுதன்**

மாணவர்களிடையே புரட்சிகரமான ஆற்றல்கள் வளர்ந்து வருகிறது. எனவே, எமதுபோராட்டத்தில் மாணவ சமுதாயத்தினது பங்களிப்பு எந்த வடிவிலமைய வேண்டும் என்பது ஒருபெரும் பிரச்சனையாகவுள்ளது ★

இன்றையபோராட்டசூழ்நிலையில் கல்விமுதலாளித்துவஅமைப்பிற்குரியதுஎனவும் இக்கல்விஅவசியமில்லை எனவும் தத்துவ வறுமைகொண்ட சிலர் பிழையான நோக்குடன் பார்க்கின்றனர். முதலாளித்துவ அமைப்பினுள் கல்வி முறையில் பல குறைபாடுகள் உண்டென்பதை நாம் மறுக்கவில்லை இன்று புதியதொரு விடியலின் நிர்மாணத்தில் முனைந்துள்ள நாம் சமுதாயத்திற்கு அத்தியாவசியமான பல சேவைகளை உற்பத்தி செய்யவேண்டும். வருங்கால சமுதாயத்தில் ஓர் பின்னடைவை எதிர்நோக்காவண்ணம் சிந்தனைத்திறனுன சமுதாயத்தினை உருவாக்கவேண்டும். சோஷலிஸ அமைப்பைப்பற்றி விளங்கிக்கொள்வதற்குக்கூட அடிப்படையான கல்வி, அறிவு அவசியமாகையால் கல்வியில் சுயமாக ஏற்படக்கூடிய தடைகளைக்கூடத் தாண்டி அதனை பெறவேண்டிய நிலைஎமது மாணவர்களுக்குண்டு ஆகையால் இன்றைய சூழ்நிலையில் உள்ளதையாவது பயன்படுத்தி நாம் எமது சிந்தனைத் திறனை பெருக்கவேண்டும்.

போராட்டத்திற்கும், சமூக நிர்மாண நடவடிக்கைகளுக்கும் மாணவ சமுதாயம் ஒரு சிறந்த சக்தியாகும். எனவே மாணவ சமூகம் அடிப்படையான விஞ்ஞானத்தையும் சோஷலிஸ அரசியல் அறிவையும் பெறவேண்டியவர்களாய் உள்ளனர். வியட்னமிய விடுதலைப் போராட்டக் காலத்தில் எதிரி கல்வியைச் சீர்குலைத்தபோது வியட்கொங் கெரில்லாக்கள் ஆக்கபூர்வமானதேவையை மாணவர்க்கு விஞ்ஞான ரீதியாக விளக்கியதுடன் அவர்கள் மறைந்து வாழுமிடங்களில் புரட்சிக் கல்விக்குரிய குணம்சயங்களோடு கல்வியறிவைப்போதித்தனர். சீனவில் போராட்டக் காலத்தில் பீக்கிங் பல்கலைக்கழகத்தில் கல்விபயின்ற மாணவர்கள் தாம் கற்றுக்கொண்டமார்க்சிய சிந்தனைகளையும், சோஷலிஸ அரசியல் சிந்தனைகளையும் கிராமப்புற மக்களுக்கு கற்பித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ ஆயுதம் ஏந்திப் போராடு கின்ற ஒரு போராளிகூட அடிப் படையான அரசியல் விஞ்ஞான சோஷலிஸ அறிவைப் பெற்றி ருக்கவேண்டும் என மா-ஓ குறிப் பிடுகின்றார்.

> சர்வகலாசாலையிலிருந்து கூட்டம் கூட்டமாய் வெளிக் கிளம்புபவர்களும், பட்டம் பெற்றவர்களும் உண்மைப் படைப்பாளிகள் ஆகமாட் டார். மனச்சாட்சியின் தூண் டுதலால் பொதுநலம் கருதித் தன் மனோவன்மையால் ஆகும் வினைகளைத் தொடங்குபவ னே உண்மைப் படிப்பாளி.
>
> உடலைப் பேணிக் கொ ழுக்க வைத்து இன்பம் நுகர் ந்து, இறுமாந்து திரிபவன் படிப்பாளி ஆகான். ஆன்மா வையும், புத்தியையும் பற்றிய பணி இன்றியமையாதது.
>
> சிரம சாத்தியமானது தன்னையே வாட்டிக்கொள் ளும் இப்பணியையே சிலுவை என்ற மத நூல்கள் இயம்பும்
>
> -இனி நாம் செய்ய வேண்டுவது யாது? எனும் நூலில்
>
> -டால்ஸ்டாய்

இன்றைய காலக்கட்டத்தில் ஒவ்வொரு தலைமுறையும் அதிக ரித்துக்கொண்டே இருக்கும் அளவில் சமூக நிலைமையின் நேர டியான நிர்ப்பந்தத்தால் தொ டர்ச்சியாக புதிய அறிவை பெ ற்று வளர்க்கவேண்டியிருக்கிறது இதற்காக திரும்பத்திரும்ப கற்க வேண்டி இருக்கிறது. இது மாண வர்களின் நடவடிக்கைக்கும் அவ ர்களின் கோரிக்கைகளுக்கும் புரட்சிகரமான ஈடுபாடுகளாக அடிப்படையில் அமைகிறது. இது மாணவர்களையும், தொழிலாளர் களையும் ஒன்று சேர்ப்பதற்கான முன் நிலைமைகளை' படைக்கிறது இதன் அவசியத்தை ஏங்கெல்ஸ் 1893ம் ஆண்டு சோஷலிச மாண வர்களின்சர்வதேசகாங்கிரஸ்சில் உரையாற்றும்போது திட்டவட் டமாக மாணவர்கள் அணிகளிலி ருந்துதான் அறிவாளி, பாட் டாளி வர்க்கம் தோளோடு தோள்கோர்த்து அவர்களுடைய சகோதரர்களின் கரத்தால் உழைப்பவர்களின் மத்தியில் செல்லவேண்டும் எனக் கூறினார்.

இன்று எம்முன் உள்ள பிரச் சனை சிங்கள பௌத்த அரசு இயந்திரத்திடமிருந்து விடுதலை பெறுவதுமட்டுமல்ல புதிய சமூக அமைப்பைச் கட்டியெழுப்புவது மாகும். அறிவாளிகளின் பங்கு இன்றி புரட்சியில் வெற்றி என் பது சாத்தியமல்ல. புதிய தேசத் தினை நிர்மாணிக்கும் போராட் டத்தில் வெற்றி பெறவும் சோ ஷலிச சமூக அமைப்பினை உரு வாக்கவும் அறிவாளிகள் தேவை எனவே இன்றைய மாணவ சமு தாயம் எழுத, வாசிக்க, கற்கக் கிடைக்கின்ற ஒவ்வொரு சூழ்நி லையையும் பயன்படுத்திக்கொ ள்ளவேண்டியது அத்தியாவசி யமாகும்.

★ ★ ★ ★ ★

26-03 85 அன்று குறிப் பிட்ட ஒரு இயக்கத்திற் எதிராக மக்கள் கண்டன உண்ணாவிரத மிருந்த போது குறிப்பிட்ட அவ் இயக்கத்தோழருக்கு மக்களால் கூறப்பட்ட ஒரு வசனம்: இயக் கங்கள் எம்மிடம் ஆயுதத்தை தந்தால் நிச்சயமாக நீதியான தமிழீழத்தை மரைச்செய்வோம். ஆயுதங்களை ந் தந்துவிட்டு அவர் ஒதுககிவிட வேண்டும்

## தோட்டத்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தார் தொண்டமான் வாய டைத்துப் போனார். இது தான் மலையக தொழிலாளரின இன்றை ய உண்மையான நிலை.

iii இந்த ஐ. தே. கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அவர்களது நிலைமை மேலும் பரிதாபமாக உள்ளது. முன்னர் அரிசி பங்கீட்டுப் புத்தகம் இருந்தால் நிலைமை சமாளிக்கக் கூடியதாக இருந்து தற்போது அமுலில் உள்ள உணவு முத்திரை திட்டம் (முழு குடும்பத்தின் வரு மானம் 300/-ரூபாவை தாண்டு வதால்) இவர்களுக்கில்லை.

iv இறுதியாக கிராமப்புற வறிய விவசாயிகளை விட மலையக தமிழ் தொழிலாளர் வசதியுடன் வாழ் கின்றனரா என்ற வினாவுக்கு விடை காண்போம் எமதுவிடை இது தான் இவ்விரு சாராரும் பொருளாதாரரீதியில் இப்போது எவ் வகையிலும் ஒருவரை விட ஒருவர் சிறந்த நிலையில் இல்லை. இவ்விரு சாராருமே இன்றைய இலங்கையின் அடிமட் டத்தில் உழல்கின்றனர். மலை யகதொழிளாருக்கு பெருந்தோட் டத்துறையில் ஒருங்கமைந்த ஒரு வாழ்க்கைமுறை இருக்கின்றது. செத்தும் சாகமல் வாழ்வதற்கான நிச்சயமான தொழில் அது உத் தரவாதப்படுத்துகிறது. இது ஒன்றுதான் அவர்களை பெருந் தோட்டத் துறையில் பிணைத்து வைத்திருக்கின்றது. மறுபுறத்தில் இந்த தொழில் உத்தரவாதமே அவர்களை மூர்க்கமான சுரண்ட லுக்குள்ளாக்குகின்றது. இதைத் தவிர வேறெதுவும் அவர்களுக் குக் கிடையாது.

(19ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிகாரம் புரியாத சமன்பாடு

நன்றி:- 'மார்க்சியம் இன்று' (செப்டம்பர் — அக்டோபர் 1984)

ஜீப் வண்டிகள் உறும
சப்பாத்துகள் ஒலிக்க
மக்கள் மத்தியில்
ஏந்திய ஆயுதங்களுடன்
காக்கி உடை ராட்சதர்கள் போல்
அவர்கள்

அவர்கள் ஏந்தும் ஆயுதமுனைகளின் மோப்பங்களுக்கு
முகம் கொடுக்காது
மௌனமாய் மக்களளோடு மக்களாய் இவர்கள்
நீட்டிய ஆயுதங்களில்
பீதியின் நிழல்
மௌன வட்டத்தில் விடுதலை விரிக்க
காத்திருக்கும் உள்வாங்கல்
வீர்யத்தின் ஒளிச்சிதறல்

அந்த ஒளிச்சிதறலில் கணிணுமைப் புழுவங்கள் போல்
பேச்சற்று உள்நடுங்கும் ஆயுதப் பரிவாரங்கள்.

அவர்களின் காக்கி முகாம்கள் கூடக்கூட
இவர்களின் விடுதலைக் குகைகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன.
அவர்களின் ஆயுதம் கக்கிய சன்னங்களில் இருவர் கொலையுண்ண
நால்வர் புதிதாக ஜனனித்தெழும் இவர்களின் விடுதலை
இனவிருத்தி பற்றி அறியாத அதிகாரம்
சர்வதிகாரம் என்பது விடுதலையை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு
தன்னை அறியாத அதைப் பிறப்பிக்க
யோனிவாயிலில் காத்திருக்கும் மருத்துவச்சி

சர்வதிகாரம் சமன் விடுதலை
எத்தனைதரம் சரித்திரம் இதைக் கற்பித்துக் கொடுத்தாலும்
அதிகார அமர்வுகளுக்கு புரியமுடியாது போய்விட்ட,
மர்மச் சமன்பாடு.

www.tamilarangam.net

### ஒரு கிராமத்தின் கண்ணீர்க் கதை

# தென்னமரவடி மக்களின் பறிக்கப்பட்ட வாழ்வும் பரிதாபமான அகதி நிலைமையும்

"பாமரமக்கள் வாழந்த பழங்குடி மனைகள் - தென்னம
மரவடியறவே அழிந்து மக்கள் துயரிதை விட வேறெதுவோ?"

இது ஓர் இன்று உருவாகும் கவியின் ஓரடி என்றுமே உருவெடுத்திராத கொடுமைகளும், வேதனைகளும், அவமானங்களும் இவை யாவையும் கண்டிராத ஈழத் தமிழ் மக்களின் பரம்பரை பரம்பரையாக இருந்து தனித் தமிழ் தாய் இனங்களின் வசிப்பிடம் சிறப்பென மலர்ந்து கொண்டு வந்ததென்னமரவடி கிராமத்தை சுற்றிவளைத்து நசுக்கப்பட்டு, அடக்கப்பட்ட இக்கிராமத்தையும், இக்கிராமமக்களின் அவல நிலைகளையும், கவலையான மொழிகளையும் சிந்தித்து நோக்குவோமாக.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஓர்எல்லையான கரையோரமான கொக்கிளாய் என்னும் அழகமைந்த கிராமத்தில் 1984ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதி சுமார்ஆறுமணியளவில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தினாலும், வெடிகுண்டுப் புரளியினாலும் ஏற்பட்ட எதிரொளியின் பயனாக அயல் கிராமமான தென்னமரவடி மக்களுக்கு ஓர் உதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதே இரவு இரு மணித்தியாலங்களின் பின் எங்கிருந்தோ வந்த இராணுவ வீரர்கள் கிராமத்தின் இரண்டு மைல் தூரத்தில் துப்பாக்கி வெட்டுக்களை இடைவிடாது தீர்த்தனர். பேரிரைச்சலுடன் ஒன்றன்பின் ஒன்ருக பயங்கர ஒலியுடன் டிரக்வண்டியிலும், கவச வாகனத்திலும் வீதியில் யாரைக்கண்டாலும் அவ்விடத்தில் சுட்டுப் பொசுக்குவார்கள்போல் பிசாசு மாதிரி வந்தார்கள். இதைக் கேட்ட கிராம மக்கள் சந்தேகத்தினாலும், பயத்தினாலும் காடுகள், பற்றை மறைவுகளில் ஓடி ஒழிந்திருந்தனர். ஆம்! கிராம மக்கள் அனைவரும் ஆங்காங்கு ஒழிந்துக்கொண்டனர். கிராமத்துக்கு வந்த இராணுவ வீரர்கள் ஓய்வின்றி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி கரையோரத்திலிருக்கும் சிங்கள இனமாகிய தங்கள் இன மீனவர்கள் இடத்திற்குச் சென்று ஏதோ திட்டம் தீட்டிப் பேசியபின் சுமார்10-30 மணியளவில் கிராமத்தைவிட்டு வந்த டிரக்வண்டிகளில் திரும்பிச் சென்றனர்.

மறுநாள் (2-12-84) அதிகாலை ஒழிந்திருந்த மக்கள் பீதியுடன் தத்தம் வீட்டிற்கு வந்தனர். மீண்டும் அந்த இராணுவ வீரர்கள் வருவார்கள் எனப் பயந்து அவசர அவசரமாக மதியச் சாப்பாட்டு ஆயத்தங்களை செய்துமுடித்து பிற்பகல் மூன்று மணியளவில் கிராம மக்கள் குழந்தை குஞ்சுகளுடன் காடுகளில் மறைந்திருப்பதற்காகச் சென்ருர்கள். சிலர் அங்குமிங்குமாய் அலைந்து திரிந்தனர். இப்படியாக மக்கள் ஏதோ, என்னவோ என்று திக்குத் திக்காய் போய் ஒழிந்துக்கொண்டிருந்தனர். அந்தவேளையில் டிரக்வண்டியில் நிரம்ப அடைந்து வந்த இராணுவ வீரர்களைக் கண்டும் அவர்களின் கவசவாகனங்களின் உருவத்தைக் கண்டும் ஊர் மனைகளில் இருந்த சிலர் ஓடிக் காட்டுக்குள் செல்வதைக் கண்ட பாதுகாப்புப் படையிளர் (பாதுகாப்பை குழப்பும் படையினர்) காட்டுவழிப் பாதையினூடாக அவர்கள் பாய்ந்த திக்கை நோக்கி வந்த வாகனங்களை பாதி வழியில் நிறுத்திவிட்டு ஓடி ஓடி கணக்கில்லாமல் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதனால் மக்கள் பயந்து செய்வதறியாது தவித்து நின்ருர்கள். குழந்தை குஞ்சுகளின் அழுகைக் குரல் மக்களின் அவலக்குரல், மறுபுறம் துப்பாக்கி வேட்டுக்களின் இடைவிடாத சத்தங்களும் ஒன்றுசேர்ந்துகேட்டது. என்ன விதம் என்று சொல்லமுடியாது மாறி மாறிக் கேட்டது. இராணுவத்தினர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தின் மறுகணமே ஐயோ! அம்மா!! என்னைக் காப்பாற்ற யாராவது வாருங்கோ!!! என்ற ஓர் திடீர் குரலும் உறவினர்களின் அழுகைக் குரல்களும் ஒலித்தன. உடனே மக்கள் எல்லோரும் திகைத்தனர். துப்பாக்கிச் சூடு தான் பட்டு அழுகின்ருர்களோ? உடன் அவ்விடத்திற்குச் செல்லவும் சிலர் தயங்கி நின்றனர். அப்போதுதான் வெளிவந்தது ஒரு பெண் துப்பாக்கிச் சத்தம் கேட்டதன் பயத்தால் தபபித்துக்கொள்வதற்கு அருகிலிருந்த ஆழமான ஆற்றில்வீழ்ந்ததினுல் ஏற்பட்ட அவலக்குரல் அந்த நேரத்தில் எல்லோர் மனதிலும் திடுக்கிட வைத்தது. அந்த நேரத்தில் எங்கும் தண்ணீர் நிரம்பலுடன் பரந்த சேறுநிலங்களாக காணப்பட்டது. ஏதோ ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில் அப்பெண் காப்பாற்றப்பட்டாள். அவசர அவசரமாக எல்லோரும் ஒன்று கூடி உடன் நாங்கள் தப்புவதற்கு என்ன வழி? முதலில் இப்போது எங்கு போவது? யாரிடம் சொல்வது? என்ற வினு எழுப்பப்பட்டது. திடீர் முடிவுடன் எல்லோரும் ஆயத்தமானுர்கள்.

இப்படியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டுவந்த இராணுவத்தினர் பக்கத்தில் நிறுத்தியிருந்த இரண்டு உழவு இயந்திரங்களேயும் அவற்றில் இருந்த பொருட்களுடன் எடுத்துக்கொண்டு ஊர் மனேயினூடாக செல்லும்வழியில் மாடுகள் சாய்த்துக்கொண்டுவந்த நான்கு பேரையும்ஏற்றிக்கொண்டுசென்ருர்களென்றும் அப்போதுஇவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வேதனேகளேயும், ஆக்கினேகளேயும் கண்களாற் பார்க்கமுடியாது கண் கலங்கி அழவோ, நானும் இவர்களுடன் சேர்ந்து சாகவோ அவன் தனிமனிதன் எவ்வளவைத்தான் தாங்கமுடியும் என்று பயத்துடனும், இரங்கலுடனும் மனதில் கேள்விகளேவிடுத்தனர்.

சோகக் கீதங்களின் ஒலியில் மூன்ருவது நாளாக பொழுது உதயமாகியது. எங்குபார்த்தாலும் என்ன செய்வது? என்ன செய்வது? என்ற கேள்விதான் மக்களின் முன்னிலேயில்கூட இதன்பின் பிடிக்கப்பட்ட நால்வர்களின் தாயும், தகப்பனுமாக நான்கு தாய், மனேவிமார்களுடன் ஒரு தகப்பனும் சென்றிருந்தார்கள். போகும் வழியில் அக்கிராமத்திலே வீடு வீடாக உணவிற்கு அலேந்து கெஞ்சிக் கூத்தாடிய அந்த வேளேயில் தமிழ் மக்களின் சொற்படி ஆட்டிப்படைக்கப்பட்டார்கள் ஏனென்ருல் அவர்கள் இருக்கும் இடத்தை தாண்டிதான் பதவியா இராணுவ முகாமிற்குச் செல்ல வேண்டும். ஈவிரக்கமற்ற சிங்கள இன வானரங்களின் கண்ணில் இவர்கள் பட்டனர். ஐயோ என் கணவரைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களே! அப்பாவியான அவருக்கு என்ன நடக்குதோ? எப்படி இருப்பார்கள்? என்ற எண்ணத்தில் ஏக்கத்தில் காணத் துடியாய் துடித்துப் பதைத்துக்கொண்டு போன அந்த பண்பான பெண்களே அன்று காலே ஒன்பது மணியளவில் இவ் வானரங்கள் வழிமறித்தனர்.

வழிமறித்த நேரத்தில் அப்பெண்கள் என்ன செய்வார்கள்? எப்படி தப்புவார்கள்? தங்கள் கையினுலேயே பிச்சைவேண்டிய அந்த இனவெறிபிடித்த காடையர்களே நன்ருகத்தெரியும். ஐயா தம்பி! உங்களுக்கு நாங்கள் என்ன செய்தோம்? எங்களே ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள். என்று இரங்கலுடன் அழுதார்கள். அந்த இரக்கமற்ற காடையர்களின் முகத்தை தடவிக்கூட கெஞ்சினுர்கள், காலில் விழுந்து வணங்கினுர்கள், மன்ருடினுர்கள்,செய்வதறியாது தடுமாறினுர்கள் இறைவா! உனக்குக்கூட இந்தநேரத்தில் கண்ணில்லேயா? ஆனுலும் அதற்கு அவர்கள் உடன்பட்டார்களா? அந்த மென்மையான உள்ளங்களுக்கு கருணே காட்டினுர்களா? ஒன்றுமறியாத எங்கள் தாய்மாரைசும்மாவிட்டார்களா?பாவம் ஈவிரக்கமற்ற அந்தக் கொடியவர்கள் அவர்கள்மீதுதம்பலத்தைக் காட்டினுர்கள். அவர்கள் அணிந்திருந்த நகைகளே சூறையாடினுர்கள். ஐயா இனியாவது எங்களுக்கு ஒன்றும் செய்யாது விட்டுவிடுங்க 'அடிப்பாவி பறத்தமிழரை நாங்கள் சும்மா விட்டதில்லேயடி' என்றவர்கள் அவர்களேப் பிடித்து......பிடித்து ......

பிடித்தவர்கள் என்ன செய்வார்கள்? ஆ! குத்திக் குடலெடுத்து மாலேயாக போட்டால் கூட கோபம் தீராது நான்கு பெண்களேயும் பிடித்து உடுத்திருந்த ஆடைகளே இழுத்துக்கிழித்துபுலாத்காரமாகசித்திரவதை செய்து தாங்கமுடியாத வேதனேகளேயும், சொல்லமுடியாத அவமான நிலேமைகளேயும் எங்கள் தாய்மார்கள் அனுபவித்துள்ளார்கள்? மிகக் கொடூரமான சித்திரவதைகளேத் தாண்டி நிர்வாண கோலத்துடன் அந்தக் காடையர்களின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு இரு பெண்கள் காட்டுவழியாக பதுங்கி ஒழித்து, தயங்கித் தயங்கி வீடு வந்துசேர்ந்தார்கள். இந்நேரத்தில் அவர்களுக்கேற்பட்ட நிலேமைகளே சொல்லமுடியாது பதைபதைத்தனர். பயந்துகொண்டு வாய்விட்டு அழுதார்கள், குமுறினுர்கள், தற்கொலே செய்ய எத்தனித்தார்கள். நாங்கள் என்னதான் செய்யமுடியும்? அவர்களின் நிலேயைக்கண்டு எல்லோரும் வாய்விட்டு அழுதுவிட்டோம். மற்ற இரு பெண்களின் நிலே கவலேக்கிடமான முறையில் எங்கு? எப்படி?எதற்காக என்ற கேள்விக்கணேகளோடு இன்னும் முடிவு வரக்காணும் அம்மா! மகனேத் தேடிப்போன அன்புத் தெய்வமே! நீ மனே தேடி வராதத்ன் காரணம்தான் என்ன?

03-12-84ம் திகதி பன்னிரண்டு மணியளவில்இச்சம்பவம் நடந்து தெய்வாதீனமாக அப்பெண்கள் உடன் வந்து கிராம மக்களுக்கு சொல்லாமல் விட்டிருந்தால் இம்மக்களின் நிலவரம் இன்னும் பாழ்பட்ட குழியில் புதைக்கப்பட்டிருப்போம். மறுகணமே நின்ற நின்றபடியில் தாய் வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்தை வேறு, பிள்ளைகள் வேறாக திக்குத் திக்காய் ஓடினார்கள் குழந்தைகளின் அழுகைக் குரல்கள் வீறிட்டுக்கேட்டது, அப்போது கிராமத்திலிருந்த எல்லா மக்களும் வெளியேற வயது போனவர்கள் வரமுடியாது,ஓட முடியாது, தவித்து நின்றார்கள். அப்போது இராணுவ வீரர்களுடன் பதவியா சிங்களஇன வானரங்களுமாக வந்தார்கள், பார்த்துப்பாராது வீடுகளுக்கு தீயிட்டனர் மிருகத்தனமாக,பயங்கரமாக, காட்டுமிராண்டித்தனமாக அவ்விடத்தில்நடந்தார்கள் கடவுளே!வீடுகளை எல்லாம்எரிக்கிறார்கள்! அப்பா அங்கேபாருங்கோ வீடுஎரிகிறது, அக்கா! இங்கேயும் வந்து எரிக்கிறார்கள் அம்மா! எங்களின் வீட்டுக்கும் தீப்பிடித்து எல்லா வீடுகளும் எரியுதம்மா எப்படிப் பார்ப்பது? என்ன பிள்ளைகள் செய்வது? நாங்கள் இனி என்ன செய்து வாழப்போகிறோம்? இப்படி ஒரு விதியா? இல்லை சதிதான் இது கடைசியாகவந்தமக்கள்கூட்டத்தில் ஓர் தாய் சொன்ன கவலையானமொழி கூக்குரலுடன் கைதட்டி மிகச் சந்தோஷமாக கரகோசப்படுத்தி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி, அனைத்து வீடுகளுக்கும் தீமூட்டினர்.

ஒளிவிளக்காய் இருந்த கிராமம் எங்கள் கிராமம் அணைந்துவிட்டதம்மா. உயிரோடு உயிராய் இருந்த எங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு ஊமைகளாக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு, தாமரைஇலையில் நீர்த்துளி நின்றதுபோல், நாய்போல் அலைந்து திரியவிடப்பட்டோம்.

கிராமத்திலிருந்து சுமார் பத்து மைல் தூரத்திலிருக்கும் கொக்குத்தொடுவாய் கிராமத்தை நோக்கி மூன்று ஆழமான ஆறுகளின் இரைக்குத் தப்பி சேறும் நீர்நிலையினூடாகவும் கால் நடையாக நடந்து சின்னஞ்சிறு குழந்தைகளை நடப்பிக்கமுடியாத போதிலும் கையில் இழுத்து பிடித்துக்கொண்டு படாத துன்பங்களை அனுபவித்துக்கொண்டு பிள்ளைகளின் பசி ஒருபுறம் குழந்தைகளை நடத்திச்செல்லமுடியாதிருந்தநிலை யொருபுறமாக கண்ணீரும் கம்பலையுமாக அன்று இடைவிடாது நடந்து கொக்குத்தொடுவாய்க்கு இரவு ஆறு மணியளயில் போய்ச்சேர்ந்தோம். ஆறுமணியிலிருந்து பத்துமணிவரை மக்கள் வந்துக்கொண்டிருந்தார்கள். சிலர் விடிந்தபின்னும்வந்துசேர்ந்தார்கள். இச்சம்பவம் நடக்கும்போது மேலாக கெலிகொப்டர் பறந்து வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அவ்வூர் மக்களின் உதவியிலும், ஆதரவிலும் இருபது நாட்கள் அங்கு தங்கியிருந்திருப்போம். அங்கு அதேமாதிரி இராணுவமும், சிங்கள இனவேடர்களும் சேந்து செய்த துப்பாக்கி பிரயோகத்தினால் ஆவோ, அம்போ எனப்பயந்து இரவோடு இரவாக காட்டுக்குள் போய்த் தங்கினோம். மறுநாளும் அங்குதான் பயந்திருந்தோம் நீர் உணவு ஒன்றுமேஇல்லாது வாடி வறண்டு வெதும்பி இருந்த அந்தவேளையை நினைத்துப்பார்க்கும்போது அழுகையா? செத்து மடியவா? இனியும் எதற்காக உயிர் வாழவேண்டும்? யாருக்காக நாங்கள் வாழவேண்டும்? இப்படியுமொரு வாழ்க்கையா? சீ.... கேடுகெட்ட அரசாங்கம் என்று ஒவ்வொரு மனதிலும் கேள்வியும், புலம்பலுமாயிருந்தது.

சுமார் மூன்று நாட்களாக காட்டிலே தங்கி பசிதாங்கமுடியாது, சதா வேதனைகொள்ள முடியாது கால்நடையாக மெல்ல மெல்ல நடந்து சிலர் முல்லைத்தீவிற்கும்,சிலர் குமுளமுனைக்கும் குமுளமுனையிலிருந்து தண்ணீர் ஊற்றுக்கும் சென்றிருந்தார்கள் பசியும் பட்டினியுமான அந்த நிலையில் மனிதர்களாகவா இருந்தோம். பேசுவதற்கும், நடப்பதற்கும் சிறிதளவேனும் சக்தியில்லை பாவம்! எத்தனை கர்ப்பிணிகள், எத்தனை பச்சிளம் குழந்தைகளுடன் அழுது, அழுது ஏங்கித் தவித்துக்கொண்டிருப்போம்.

இதை யாருககு சொல்லி அழுவது? தமிழினமான எங்களுக்கு இப்படியொரு நிலையா? அன்றிலிருந்து இன்றுவரை 13 பேர்களை கொண்டுபோயிருக்கிறார்கள். அவர்களில் நால்வர் சடலங்களாக அங்கங்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வீதியோரங்களில் போடப்பட்டிருந்தன. குகுதியினரின் நிலை என்னவோ? இறைவா! நீயும் பார்த்துக்கொண்டுதானா இருக்கின்றாய்? தாயே நன்மைக்கு தீமையாக இப்பொழுது அகதிகளாக அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு பச்சைப் புண்ணில் வேல் பாய்ந்ததுபோல் துடியாய் துடித்துக்கொண்டிருக்கிறோம். இந்நிலமையான எங்களுக்கு ஒரு விடிவு வராதா?... சுக வாழ்க்கை வாழுவோமா?... உயிர்கள் அனைத்தும் இருக்குமா?...

- நிலை தடுமாறி தவித்துக்கொண்டிருக்கும் தென்னமரவடி கிராம மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்னாசிய சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும் சோஷலிசத்திற்கான பாதையும்

பெரும்பாலான விடுதலை இயக்கங்கள் சிறு முதலாளித்துவ தலைமையைக் கொண்டனவாயுள்ளன, சோஷலிசப் போராட்டத்திற்கான அடித்தளம் இப்பொழுதிருந்தே கட்டப்பட வில்லையானால் இச்சிறுமுதலாளித்துவத்தலைமை,

இது ஒரு கருத்துக்களம் இங்கே நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும். மேற்குறிப்பிட்ட தலைப்பில் ஒவ்வொரு ஸ்தாபனங்களது கருத்தும் தொடர்ச்சியாக் பிரசுரிக்கப்படும். இவ் விடயம் தொடர்பாக வாசகர்களின் கருத்துக்களும் வரவேற்கப்படுகிறது.

"வெகுஜனங்கள் சுரண்டப்படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாயின், அரசியல் சுதந்திரம் என்பது பட்டினியால்வாடும்கோடிக்கணக்கானக்களின் உண்மையானபொருளாதார சுதந்திரத்தையும் உள்ளடக்கியதாக இருக்தல் வேண்டும்.''

(1931ம்ஆண்டு இந்திய தேசியகாங்கிரஸின் கராச்சி மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட அடிப்படை உரிமைகள் என்ற பகுதியிலிருந்து)

பொருளாதார சுதந்திரமின்றித் தேசியவிடுதலை பூரணத்துவம் அடை.வதில்லைஎன்பதையும் பொருளாதாரசுதந்திரத்தை முதலாளித்துவத்தின் கீழ்அடைய முடியாது என்பதையும் ஏற்றுக்கொள்வதனாலேயேவிடுதலை இயக்கங்கள் அனைத்தும் தங்க்ள் இலட்சியம் சோஷலிசம் எனக் கூறிக்கொள்கின்றன.

மந்திர உச்சாடனம் போல் சோஷலிசம் என்ற வார்த்தையை அடிக்கடி கூறுவதால்மட்டும் சோஷலிசம் ஏற்படப் போவதில்லை. அதற்கான அடித்தளத்தை கட்டியெழுப்பவேண்டும் அப் பணியை எப்போது மேற் கொள்வது? எவ்வாறு மேற்கொள்வது?

இன விடுதலைக்குப் பின் சோஷலிசத்துக்கான பணியை ஆரம்பிக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இது ஒரு தவறானகருத்து இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குகந்த அத்திவாரத்தை அமைக்கும் பணியும் சம காலத்தில் பக்கம் பக்கமாக மேற்கொள்ளப்பட வேண்டியவை.

நிலப்பிரபுத்துவ முதலாளித்துவசக்திகள்ஏற்கனவே ஸ்தாபன பலமும் பெற்றனவாயுள்ளன இனவிடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கட்டத்தில் இச்சக்திகள் தங்களைமேலும்பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பர் இந்நிலையில், சோஷலிசத்துக்கான சக்திகள் அப்போது தான் தங்களை ஸ்தாபனப்படுத்த ஆரம்பிப்பார்களாயின் அவர்களை ஏற்கனவே பலம் வாய்ந்தனவான நிலப்பிரபுத்துவ. முதலாளித்துவ சக்திகள் முளையிலேயேநசுக்கிவிடுவர்

எத்தகையபொருளாதார வளர்ச்சிப் பாதையை தேர்ந்தெடுப்பது என்ற விடயம் இன விடுதலைப் போராட்ட காலத்திலயே தீர்மானிக்கப்படுவதுமாத்திரமன்றி அதற்கான அடித்தளமும்அக்காலத்திலேயே இடப்படல் வேண்டும் அவ்வாறன்றிஇன விடுதலைக்குப் பிந்திய காலத்துக்கு அப்பணி பின் போடப்படுவது பொருளாதார அராஜகதுக்கே. வழிவகுக்கும்.

அதன் வர்க்குணம்சத்தின்படி சோஷலிசப் பாதையில் தடையாக வரலாம்1978ம் ஆண்டு எம் பி. எல்.ஏ தொழிலாளர் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான "லூஸியோ லாரா'' The african Communist என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில்கூறிய பின்வரும் வார்த்தைகளை நாம் கவனத்துக்கெடுக்க வேண்டும்.

எங்கள் நாட்டில் பெருந்தொகையான புரட்சிகரப்போராளிகள் சிறு முதலாளித்துவப் பிரிவிலிருந்தே வந்தனர். அவர்கள் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து தொழிலாளி வர்க்கத்துடனும் அதன் சித்தாந்தத்துடனும் தங்களை இனம் காட்டிக் கொண்டதுடன் புரட்சிகர நடவடிக்கைகளின்தலைமைத்துவத்தையும் பெற்றனர். அங்கோலாவில் சுதந்திரம் வென்றெடுக்கப்பட்டதும் முதலாளித்துவாதிகள் ஒரு வர்க்கம் என்ற வகையில் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருப்பதை நாம் அவதானித்தோம்.

இனி சோஷலிசப் போராட்டத்திற்கான அடித்தளத்தை அமைக்கும் பணியை எவ்வாறு செய்யலாம் எனப் பார்ப்போம்.

முதலாளித்தத்துவம் மெதுவாக வளர்ந்து அதன் உள் முரண்பாடுகள்கூர்மை அடையும் வரை சோஷலிச மாற்றத்துக்காகக் காத்திருக்க தேவையில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டம் ஏற்படாமலேயே முதலாளித்துவ மாற்ற வளர்ச்சிப் பாதை மூலம்" சோஷலிசத்தை நாடிச்செல்லமுடியும். இது புரட்சியின் தேசியஜனநாயகக் கட்டம் தேசிய ஜனநாயகப் புரட்சி இரண்டு போராட்டங்களை உள்ளடக்கியது தேசிய அடக்கு முறைக்கு எதிரானதும் நிலப்பிரபுத்துவ- முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கு எதிரானதுமான இவ்விரு போராட்டங்களும்- ஒன்றிற்காக மற்றது பின் போடப்பட முடியாதவை.

முதலாளித்துவமற்றவளர்ச்சிப் பாதை பொருளாதாரத்தின் கேந்திர அம்சங்களும் சட்டவாக்கல் அதிகாரமும் அரசின் வசமாயிருக்கபொதுத்துறையும் தனியார் துறையும் சம காலத்தில் செயற்படும்ஒருகட்டத்தைதாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகள் அரசின் மீது தமது செல்வாக்கைச் செலுத்த முயற்சிப்பார்களென்பதால் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை வர்க்கப் போராட்டத்துக் கூடாகவே முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளது தேசிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் சமூக சக்திகள் ஸ்தாபன ரீதியாகப் பலம் வாய்ந்தனவாக - இல்லாவிட்டால் இந்த வர்க்கப் போராட்டத்திற்குவெற்றிகரமாக முகங்கொடுக்க இயலாது போய்விடும். இதைக்கருத்தில் கொண்டே முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதையின் வெற்றிக்கான இரண்டு முன் நிபந்தனைகளுள் உழைக்கும் மக்களின் ஸ்தாபனங்களது தனித்துவமான அரசியற்செயற்பாட்டையும்-அரசியல் அறிவுவளர்ச்சியையும் முதலாவதாக லெனின் குறிப்பிட்டார்

ஆகவே தேசிய ஜனநாயகப் புரட்சியின் பிரதான சமூக சக்திகளை ஸ்தாபனப்படுத்திஅவர்களுக்கு அரசியல் அறிவு ஊட்டும்பணிஇனவிடுதலைப் போராட்ட-காலத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

இன விடுதலைப் போராட்டத்தை முன் எடுத்துச் செல்லல் தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான- பிரதான சமூக சக்திகளை ஸ்தாபன ரீதியாகவும், அரசியலறிவு ரீதியாகவும் பலப்படுத்தல் ஆகிய பணிகளிரண்டையும் ஒன்றை யொன்று பாதிக்காத விதத்தில் சமகாலத்தில் செயற்படுத்தும் திறமை மிக்க தலைமையினால் தேசிய விடுதலைப் போராட்டத்தைசோஷலிசஇலக்கை நோக்கியிட்டுச் செல்ல முடியும்.

(பாசறை வெளியீட்டாளர்களின் கருத்து)

★ ★ ★ ★ ★

வடக்கு.....

(2ம் பக்க தொடர்ச்சி)

முத்திரைகளின் மூலம் பிரச்சினைகளை சமாளிக்க முற்படுவது மக்களின் அதிருப்தியை உண்டாக்குவதாகவே அமையும். எனவே இயக்கங்கள் பொது விடயங்களை அவதானமாகக் கையாளுதல் வேண்டும். இத்தகைய பிரச்சனைகள் கிராமமட்டங்களில் அமைக்கப்படும்"மக்கள்குழு"க்களால்அணுகப்படுவதே சிறந்ததாகும்,

இன்று தமிழ்ப்பகுதிகளில் நடைபெறும் போராட்டம் அரசுடன் கூடிய தேச விடுதலை என்பதற்கும் அப்பால் சென்று அரசிலிருந்து பிரித்து இன்னுமொரு புதிய தேசிய அரசை நிர்மாணிப்பதற்கான போராட்டமாகவிளங்குகின்றது. இளைஞர் இயக்கங்கள் யாவும் இந்த நோக்கில் இயங்குகின்ற போதிலும், அதனை அடைவதற்கான வழிவகைகளைக் கையாளுவதில் தம்மிடையே கருத்து வேறுபாடுகள் கொண்டனர் போலத் தென்படுகின்றது. ஆனால் இந்த இயக்கங்கள் மக்கள் சக்தியே அடிப்படையான போராட்டசக்தி என்பதனை விளங்குதல் அவசியம். எனவே விடுதலைப் போராட்டப் பாதையில் மக்களுக்கு ஏற்படப்போகும் நெருக்கடிகளை முன் கூட்டியே கருத்திலெடுத்து, அதனைத் தவிர்க்கக்கூடிய வழிகளைக் கடைப்பிடிக்கத் தயாராக வேண்டும்.

உதாரணமாக இவ்இயக்கங்கள் இராணுப்பிரிவு, பிரச்சாரப்பிரிவு போன்ற பகுதிகளைஅமைத்துப் போராட்டத்தை விரிவுபடுத்தும் அதே வேளையில்மக்கள் நலன் பேணுவதற்கான முழுக்களை அமைப்பதில்முக்கியத்துவம்வழங்குதல் வேண்டும் அந்நடவடிக்கையும் போராட்டத்தின்அடிப்படையான ஓர் அங்கமேயாகும். இவ்வாறான நடவடிக்கைகளில் பொது மக்களை ஈடுபடுத்துவதனால் அவர்களையும் போராட்டத்தில் பங்குபற்ற வைக்கலாம் எனவே மக்கள் மத்தியில் "மக்கள் குழு" போன்ற உள்ளூர் அமைப்புகளை ஆரம்பிப்பதன் மூலமும் செயற்பாட்டைத் தூண்டலாம். இத்தகைய பிரச்சினைகள் குறித்துநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடத்து இளைஞர் இயக்கங்கள் ஒன்றையொன்று புரிந்து கொள்வதுடன் ,ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். குறிப்பாக மத்திய தர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய குணும்சம் அதிகமாகக் கொண்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் போராட்டங்கள் சரியாக நெறிப்படுத்தப்படா விடின் தோல்வி போகக் கூடிய அபாயங்களும் ஏற்படலாம். எனவே இவற்றினை இளைஞர் இயக்கங்கள் கருத்திற் கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

"பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையால் எமது கிராமிய சுயதேவை பொருளாதாரம் முற்ருக அழித்தொழிக்கப் பட்டு விட்டது. எமது வளமான காடுகள் நாசமாக்கப்பட்டு விட்டன. இலங்கையின் அந்த "பொற்காலம்" சிதைக்கப் பட்டு விட்டது எமது வளமான காடுகள் நாசமாக்கப்பட்டு விட்டன. இதனுல் எமது மழைவீழ்சசிகுறைந்து வருகிறது. மண் அரிப்பு அதிகரித்து ஆறுகள் பெருக்கெடுக்கின்றன. ஆகையால் உடனடியாக பெருந்தோட்டங்களை கைவிட்டு அவற்றைக்காடாக மாற்ற வேண்டும் மீண்டும் அந்தக் கிராமிய சுயதேவபொருளாதாரத்தைஉருவாக்கி "பொற்காலத்தை" நிலைநிறுத்த வேண்டும்,

இந்தப்பொய்மையில்ஒரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது காடுகள்அழிக்கப்பட்டமை மழைவீழ்ச்சி குறைந்தமை மண் அரிப்பினுல் ஆற்றின் படுக்கை உயர்ந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுதல் இவை யாவும் தடுக்கப்பட்டவேண்டியவை. லாபம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டமூலதனத்துவத்தின் திட்டமில்லாத பொருளாதாரத்தின்விபரீதவிளைவுகள் இவை. அதுமாத்திரமல்ல இப்பெருந்தோட்டங்கள்இன்றும் கூட அந்நிய கம்பனிகளுக்கு லாபம் பெற்றுக்கொடுக்கும் ஒரு உற்பத்தியாகவே திகழ்கிறது. இந்த நிலைமையை மாற்றி எமது நாட்டின் நலனுக்கேற்ப திட்டங்கள் தீட்டுவது எமது தேசிய கடமை ஆனுல் இவர்கள் கூறுவதென்ன?

இவர்கள்வரலாற்றுரீதியில் நியாயபூர்வமாகசெத்து மடிந்த அந்தகிராமியபொருளாதாரத்தை நினைத்து ஒப்பாரி வைக்கிருர்கள். கடந்த காலத்தைப் பின்னேக்கி தொழும் இந்த மனிதர்கள் ஒன்றை மறந்துவிடுகிருர்கள் அன்றைய இலங்கையில் அவர்கள் நினைப்பதைப் போல அப்படி ஒன்றும் கொழிக்கவில்லை. வரம்பு முறையற்ற முடியாட்சியின் கீழ் ஒருசில நிலச் சுவாந்தார்களுக்கு சொந்தமாயிருந்த நிலத்தில் மிகப்பெரும்பான்மை மக்கள் பண்ணை அடிமைகளாய் அவ்திப்பட்டனர். சாதி அமைப்பும்நிலப்பிரபுத்துவ சட்டங்களும், வரிகளும் அவர்களைக் கசக்கி பிழிந்தது.பெரும்பகுதி மக்கள் சிறுச்சர்ராரைக் கொண்ட உயர்சாதியினரின் அடிமைச்சேவகர்களாய் இருந்து மாட்டுவண்டியும் மண்வெட்டியும், எருதும் கொண்டு உற்பத்தி செய்யப் பட்ட நவீன வளர்ச்சியற்ற அந்தப் பின் தங்கிய நிலப்பிரபுத்துவ இலங்கையை விட ஆயிரம் குறைகளுடன் கூடிய இன்றைய மூலதனத்துவ இலங்கை ஆயிரம்மடங் முன்னேற்றமானது.நாம்முன்னேக்கு படைத்தவர்கள். இன்றிருக்கும் குறைபாடுகள் நீக்கப்பட்ட இதை விட முன்னேற்றமான ஒரு சமுதாயத்தை கட்டி யெழுப்புவது தான் எமது லட்சியமே தவிர- பின்னேக்கிச் செல்வதோ பின்னேக்கித் தொழுவதோ அல்ல.

இன்றிருக்கும் தொழிற்சாலைகளைமூடிவிட்டுடிராக்டர்களை அழித்தொழித்து விட்டு,கால்சட்டைகளை அவிழ்து கோவணம்கட்டிக் கொண்டு கையில் மண்வெட்டியுடன் எருது பூட்டி உழும் அந்தக்காலம் எமது லட்சியமல்ல, இன்றைய நவீன போக்குவரத்து தொடர்பு சாதனஇத்தியாதி வசதிகளை அழித்தொழித்து விட்டு மாட்டு வண்டியுகத்தில் புகுதூது விடுவதுஎமதுநோக்கமல்ல. இதை விடவும்நவீனவசதிகளுடன் கூடிய இயந்திரமயமான சகல மக்களுக்கும் இவ்வசதிகளின் பயன்கள்கிடைக்க் கூடிய ஒரு முன்னேற்றகரமான சமுதாயத்தை உருவாக்குவதே நமது லட்சியம்.

இந்த பின்னேக்கித்தொழுவோரின் கருத்துரைகளின் ஆபத்து யாதெனில் இக்கருத்தோட்டம் சகல நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களையும்துதிபாடி வழிபடுகிறது. மக்களைமதபீடத்தோடும் நிலப் பிரபுக்களுடனும் இறுகப்பிணைக்கிறது. பெரும்தோட்டத்தையும்.மலையக தொழிலாளரையும் தமது பொற்காலத்தை நாகரீகத்தை,அழித்தொழித்துஎதிரிகளாக நோக்கும்மனேபாவத்தைஉருவாக்குகிறது. கிராமிய மக்களிடையே காணப்படும் பழமைவழிபாட்டுக் கண்ணேட்டத்தை வலுப்படுத்தி முற்போக்கானமாற்றங்களை ஆதரிக்கவிடாமல் அவர்களைத் தடுக்கிறது

"மலையக தமிழ் தொழிலாளர்கிராமப்புற சிங்களமக்களை விட சிறப்பான நிலையில் வாழ்கிருர்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை ஒருகுடும்பத்தில்எல்லோரும் உழைக்கிருர்கள் நாள் தோறும்வேலைசெய்கிருர்கள்.கை நிறையச் சம்பளம் எடுக்கிருர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதிலும், கழுத்திலும் நிறையத் தங்கநகைகள் போட்டுள்ளார்கள் அவர்களுக்கு வீடில்லாப்பிரச்சனை கிடையாது தோட்ட நிர்வாகம் வீடு கொடுக்கிறது அதுமட்டுமா தோட்டத்திற்குத் தோட்டம் பாடசாலைகள்பிள்ளைக்காம்பரா டிஸ்பென்சரிகள்இப்படிஎல்லாம்வழங்கப்படுகிறது தேவையான அரிசி மாசினிபோன்ற உணவுப்பொருட்கள் தேவையான அளவு கடனுக கிடைக்கிறது. போதாக் குறைக்கு அவர்களது தலைவர் அமைச்சராக இருக்கிறார்.''

இத்தகைய கருத்துக்கள் எல்லாவழிகளிலும்சிங்களர்மத்தியில்பிரசாரம்செய்யப்படுகின்றன இதே கருத்தைத்தான் இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர்கூட ஒரு வெளிநாட்டு நிருபரின் பேட்டியில் வெளிப்படுத்தினார். குறிப்பாகஇன்று இ. தொ. க தலைவர்தொண்டமான் அமைச்சராக இருப்பதனாலும் அடிக்கடி அரசசச்திவானொலியும், பத்திரிகைச்சாதனங்களும்''தோ தொழிலாளருக்கு உயர்ந்த ரக பசுக்கள் கடனுக வழங்கப்பட்டுள்ளன.''விரைவில் தோ.தொழிலாளருக்கு நவீனவீடுகள்கட்டிக் கொடுக்கப்படும்'' என்பது போன்ற செய்திகளைவெளியிட்டுவருவதனாலும், வாழ்வுக்கும்சாவுக்குமிடையே இன்றைய பொருளாதாரப் பிரச்சனைகளால் ஜீவமரணப்போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கும் அப்பாவி சிங்களமக்கள் மத்தியில்''இந்த நாட்டின்சொந்தக்காரரான நாம் ஜீவ-மரணப்போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம் ''கள்ளத்தோணிக்காரன்'' வசதியாகவும் நிம்மதியாகவும் வாழ்கிறான். இந்த அரசாங்கம் தொண்டமானுக்கும்ஏராளமான சலுகைகளைவழங்குகிறது.எம்மை மிதித்து நசுக்குகிறதுஎன்ற கருத்து பரப்பப்படுகிறது.

உண்மையில்அரசாங்கம் திட்டமிட்டே இந்தக்காரியத்தை செய்கிறது. ஒருபுறத்தில் ஏனைய தொழிலாளருக்கும் மக்களுக்கும் வழங்குகிற ஒரு சிலசலுகைகளைத் தானும் தோட்டத் தொழிலாளருக்கு வழங்காமல் அவர்களை படுமோசமாகச்சுரண்டுகிறது. (உ+ம் உணவுமுத்திரை வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை சமாளிக்க ஏனையோருக்கு வழங்கப்பட்ட அலவன்ஸ், வயோதிபர்- விதவை சகாயநிதி போன்றவை) மறுபுறத்தில் அவர்களுக்குஏராளமான சலுகைகளை தாராளமாக அள்ளிக்கொடுத்து விட்டது போன்ற ஒரு எண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியிலும் வெளியுலகிலும் பரப்பி வருகிறது. இதன்உள்நோக்கம்முறையேசிங்களமக்கள்மத்தியில்தப்பபிப்பிராயத்தையும்குரோதத்தையும் வளர்த்துஇருசாரார் மத்தியிலும் ஐக்கியத்தைக்குலைப்பதும் வெளிஉலகிலும்,இந்நாட்டிலும்மலையக தொழிலாளர் மீது அநுதாபமுள்ள சக்திகளின்எதிர்ப்பைத் தணிப்பதும், வெகுஜன அபிப்பிராயத்தை தப்பு வழியில் இட்டுச் செல்வதும் தாம்.

1. மலையக தமிழர் தொழிலாளர் சிங்கள வறியவிவசாயிகளை விட சிறப்பாக வாழுகின்றனரா?

மலையக தமிழர் தொழிலாளரதுவாழ்க்கைத்தரத்தையும் வருவாயையும்உபாலி, தாசபோன்ற பெரும்முதலாளிகளின் தரத்தோடுஏன் ஒப்பிடக்கூடாது? போகட்டும் ஏன் ஒரு நகர்புற சாரசரி தொழிலாளியின் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது? எதற்காக இந்நாட்டின்மிக்வும்அடிமட்டத்தைச் சேர்ந்த கிராமப்புற வறிய விவசாயிகளுடைய வாழ்க்கைமட்டத்துடன் ஒப்பிடவேண்டும்? விடயம் மிகத்தெளிவாகவுள்ளது முதலாவதாகஅவர்களதுஒப்பீடே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது மலையகதொழிலாளரது வாழ்க்கைத் தரம் மிக மட்டமாக உள்ளபடியால் வேறெவருடனும், அவர்களை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது என்றஉண்மையை அவர்கள் தம்மையறியாமல் ஒத்துக் கொள்கிருர்கள்.இரண்டாவதாக ''மூன்று நாளைக் கொரு முறை கஞ்சி குடிப்பவன்வசதியானவனு? நான்கு நாட்களுக் கொருதடவை சோறுதின்பவன்வசதியானவனு? என்ற குதர்க்க வாதம்இது ''மலையகதமிழ் தொழிலாளிக்குநான்கு நாளைக்கொருதடவையாவதுசோறு கிடைக்கிறது எம்மவர்க்கு அது அதுதானும் இல்லை'' என்றுஇவர்கள் நயவஞ்சகமான அநுதாபத்தை தம்மவர் மீது அந்நியருக்கு எதிராகப் பொழிகிருர்கள் இதன் மூலம் மலையகமக்கள் நான்குநாட்கள் பட்டினி கிடக்கிருர்கள்என்ற உண்மையையும் தம்மவரை இத்தகைய கீழ் நிலையில் வைத்து சுரண்டுவது தாமே என்ற விபரத்தையும் மூடி மறைக்கிருர்கள்.மூன்ருவதாக இவர்களின்இந்தஅரசியல் கபடம் தற்செயலானதல்ல. மிகவும் அடிமட்டத்தில் உழன்றுகொண்டிருக்கும் கிராமப்புறவறிய விவசாயிகளையும் மலையச் தொழிலாளரையும்எதிரெதிரே நிறுத்தி இருவர் மத்தியிலும் குரோதத்தை வளர்த்து இருசாராரதுபிரச்சினையையும் திசைதிருப்பிஇருதரப்பினரையும் எளிதாகச் சுரண்டுவதே இவர்களது நோக்கம். மலையக தொழிலாளரின் உண்மை நிலையை இனி பார்ப்போம்:

1. பின்வரும் ஒருசாதாரண உதாரணத்தைக் கொண்டு மலையக தொழிலாளரின்வாழ்க்கைத்தரத்தை அறியாலாம். மலையகதொழிலாளர் மிகக் கடுமையாக உழைப்பவர் இக் கூற்றை எவரும் மறுக்கமாட்டார்கள் அவர்கள் உழைக்கும்போது வெளியேறும்சக்தியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(கலோரி) மீட்டெடுக்க கூடிய ஒரு சாதாரண உணவுப் பட்டியலைத் தாயரித்து அதற்காம் செலவைக் கவனிப்போம்.

நாம் உதாரணத்துற்கு எடுத்துக்கொண்ட குடும்பம் 6 அங்கத்தவரைக் கொண்டது. அதில் 4 பேர் உழைப்பவர்கள். (இரு ஆண்கள் இருபெண்கள்) இருவர் மாத்திரமே இந்த நால்வரின்உழைப்பில் தங்கியுள்ளனர். ஒன்று பாடசாலை செல்லும்சிறுவன் மற்றது வயதான தந்தை 1981 இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு இது)

| காலை உணவு | | மதிய உணவு | | இரா உணவு | | சிற்றுண்டி |
|---|---|---|---|---|---|---|
| 2½இருபாண் 2-70 × 2½ | =6-75 | அரிசி1½ கொத்து | = 9-00 | இடியப்பம் | = 12-00 | 8-00 |
| | | இறைச்சி 1இரு | = 6-00 | கறி | = 7-00 | |
| 6 முட்டை 1.50 × 6 × | =9-00 | மரக்கறி 2 | = 6-00 | பழம் | = 5-00 | |
| | | கீரை 1 | = 1-00 | | | |
| மாஜரின் | =1-00 | மசாலாவகை | = 5-00 | | | |
| 6 தேநீர் | =3-00 | | | | | |
| மொத்தம் | 19-75 | | 27-00 | | 24-00 | 8-00 |

ஆறுபேர் கொண்ட இக்குடும்பத்திற்கு உத்தேச சத்துணவிற்காகும் ஒருநாள் செலவு = 78 - 75

எனவே ஒருமாதச் செலவு = 78-75 × 30 = 2362-50

(ஆ) இனி இவர்களது மாத வருமானத்தைப் பார்ப்போம். அரசாங்க சட்டப்படி இவர்களுக்கு மாதம் 18நாள் வேலை வழங்கப்பட வேண்டும். ஆணுக்கு 15-40 வீதமும் பெண்ணுக்கு 13-25 வீதமும் வேதனம் வழங்கப்பட்டது. நால்வரும் 18 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தாலும் பெறக்கூடிய மொத்தச் சம்பளம் 1031-40மாத்திரமே.

(இ) இப்போது உத்தேச சத்துணவின் செலவை மாதசம்பளத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்

| | | ரூ ச | வீதம் |
|---|---|---|---|
| 6 பேருக்கு உத்தேச உணவுக்காகும் மாதாந்த செலவு | = | 2362-50 | 100% |
| 4 பேரின் மாதச் சம்பளம் | = | 1031-40 | 44% |
| துண்டு விழும் தொகை | | 1331-00 | 56% |

சில முடிவுகளை குறித்து கொள்ளுவோம்நாலுபேர் உழைத்து இரண்டு பேரை வாழவைக்க முடியாத அளவுக்கு,மோசமான நிலையில்மலையகதொழிளார்வாழ்றனர்.

உழைக்கும் 4பேர்மாத்திரம்-தங்இருப்போரைவிடுத்து-வாழ்வதாக இருந்தாலும் கூட இதன்படி ரூ 1575/= உணவுக்கு மாத்திரம் தேவைப்படும், தேவையின் 66% மாத்திரமே அவர்களுக்குக் கிடைக்கிறது.

அவர்களது சம்பளம் அவர்கள் இழக்கும் கலோரியின் 43/ வீதத்தைத் தானும் மீட்டுப் பெறுவதற்குப் போதாமல் உள்ளது இப்படிப் உணவுக்குக் கூட போதாத சம்பளத்தில் அவர்கள் உடைக்கு என்ன செய்வார்கள் மண்ணெண்ணை (அவர்களதுலைன்களில் மின்சாரம் கிடையாது) போன்ற செலவுக்கு எங்கே போவார்கள்? பிள்ளைகளை எவ்வாறு படிக்க வைப்பார்கள்?

அவர்களுக்கு உணவு முத்திரையோ சொந்த நிலமோ கிடையாது. எனவே மேலதிகமான வருமானம் எதுவும் அநேகமாக கிடையாது. இந்நிலையில் அவர்கள் சாகாமல் உயிர் வாழ வேண்டுமானால் பின்வரும் மூன்று வழிகளில் ஒன்றைத்தான் மேற்கொள்ள வேண்டும். ஒன்று கூடுதலான நாட்கள் உழைத்து ஊதியத்தை கூட்டிக்கொள்ள வேண்டும். இது விளைச்சல் அதிகமாக உள்ள பருவகாலங்களில் மாத்திரமே சாத்தியமாகும். ஏனைய நாட்களில் நகர்ப்புறங்களுக்குப் போய் ''மிகக் குறைவான கூலிக்கு'' வேலை செய்வதற்கும் அதிகமான தொழில் வாய்ப்புகள் கிடையாது. இரண்டு தமது உணவின் தரத்தையும் அளவையும் தாழ்த்திக கொண்டு அடிக்கடி பட்டினி கிடப்பதன் மூலம் ஈடு செய்யவேண்டும். மூன்று கடன் வாங்கவேண்டும். இவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடன்காரர் சுரண்டுவது இதனால் மிக எளிதாகிறதுஇவர்களை கடன் காரர் சுரண்டும் அநாகரிகமான முறைகளை யாவரும் அறிவர்.

இம் மூன்று வழிகளாலும் கூட மலையக தொழிலாளர் தமது வாழ்க்கையை இன்றுசமாளிக்க முடியாதநிலையில் உள்ளனர் இவர்களது வருவாய் அவர்கள் வாழ்வதற்குப் போதாது. சாகாமல் இருப்பதற்கு மாத்திரமே போதுமானது.

தோட்டத் தொழிலாளருக்கு கிடைக்கும் வரும்ானம் போதும் அவர்கள் சாராயத்திலும் ஏனையஊதாரித்தனத்திலும் அதிகம் செலவழிக்காமல் சிக்கனமாக வாழ்ந்தால் அவர்களால் சேமிக்கவும் இயலும்என பழியை அவர்கள் மீதே பல அரசியல் வாதிகள் போடுகின்றனர். அமைச்சர் தொண்டமாண் கூட 70ரூ அலவன்ஸ் கிடக்காத பாரபட்சத்தினால் மனம்குமுறிக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளரிடம், செல்லும் இடமெல்லாம் இவ்வாறு இதே கூற்றைக் கூறி பிரச்சனையில் இருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்தார். ஒரு (1982 இல்) தலவாக்கெலை இ.தொ.கா அரசியல் சங்க காரியாலத்தில் க்கைத்து அவர் ஒருதெழிலாளியிடம்வகையாக மாட்டிக்கொண்ட ஒரு சம்பவம் தோ. தொழிலாளரின் நிலையை மேலும் உணர்த்துகின்றது.

தொண்டமான் ''எதற்கு இப்போ அளவன்ஸ்......குடிக்கிற சாரயத்திற்குக் கொடுக்கும் காசை சேமித்தாலே போதுமே! என்று கூற சிங்கராயர் என்ற தொழிலாளிஇடைமறித்து''சார் எங்கள் குடும்பத்தில் 5பேர் உழைக்கிறோம். ஒருதம்பி மாத்திரம் படிக்கிறான். வயது போன அப்பா எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான ஒரு மாடு வளர்க்கிறார் நாம் ஐந்துபேர் உழைத்தும் கடந்த மாதம் தோட்டத்திற்கு 10 ரூபாய் ஆளுக்குக்கடன். மண்ணெண்ணெய்மேலதிகமாவுஅரிசி ஆகியவற்றிற்கு நாம் வெளியில் வேறு கடன்பட்டிருக்கிறோம் எங்களுக்கு ஒரு பால்மாடு இருக்கின்றது எங்கள் குடும்பத்தில் யாரும் தண்ணி போடுவதில்லை வீண்செலவு எதுவும் கிடையாது. இருந்தும் கடன்தான் மீதி'' என்று கூற ''அது எப்படி இருக்க முடியும் வரவு செலவு கணக்கு விபரத்தைச் சொல்லு என அமைச்சர் வினவ தொழிலாளி தங்கு தடையின்றி உள்ள கணக்கை உள்ளபடி அப்படியேசமர்ப்பித்தார் அடிக்கடி தொண்டமான்குறுக்கு கேள்விகள் எழுப்பியும் பயனில்லை; தொழிலாளி தனது கூற்றை நிரூ

(6ம் பக்கம் பார்க்க)

## அஞ்சலி

மலையகத்தின் மூத்த தொழிற்சங்க வர்தியும், கவிஞரும் எழுத்தாளருமான திரு. சி. வி வேலுப்பிள்ளை அவர்களின் மறைவிற்கு வருந்துகிறோம்: எமது ஆழ்ந்த அஞ்சலிகளையும் செலுத்துகிறோம். 'மனிதப் பிண்டங்களாக' இறக்கி ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கும்— ,நவீன அடிமைகளாய்' இந்த நாட்டிலே மிக மோசமான சுரண்டலிற்குள்ளாக்கப் பட்டிருக்கும்— மக்கள் திரளான மலையகத் தமிழ் மக்களிற்காக, அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துழைத்தவர்: ஆங்கிலத்திலும் தமிழிலும் புகழ்பெற்ற கவிஞர் எழுத்தாளர் தேயிலைத் தோட்டத்திலே, 'Born to labour' இனிப் படமாட்டேன் ஆகியவை அவற்றில் மிகமுக்கியமானவையாகும். மலையக மக்களிற்காக முனைப்புடன் உழைத்தபோதிலும், வடக்குக் கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அக்கறையும், அனுதாபமும் கொண்டிருந்தார். வரலாற்றின் தவிர்க்கவியலாப் போக்கு அதுவென்பதை விளங்கிக் கொண்டதில்— தான் காந்திய வாதியாக இருந்தபோதிலும், அங்கு நடந்து கொண்டிருக்கும் ஆயுதப் போராட்டத்திலும் அதன்வெற்றியிலும், நம்பிக்கையும் கொண்டிருந்தார் தனது அந்திம காலத்தில் சிலருடன் உரையாடுகையில் பின்வருமாறு அவர் கூறினர் ''......' இன்னும் பத்து வருஷங்களுக்குள் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வீடும் தீவிரவாதிகளின் குகைகளாகிவிடும்: ஒரு தீவிரவாதியைக் கொன்றால், பத்துத் தீவிரவாதிகள் தோன்றுவர்: பாவம் அத்துலத்முதலி! இவர்களால் அதை ஒழிக்க ''முடியாது''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு சாகராவின் விடுதலைப் போராட்டம்

### அகதிகள்

1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச கமிட்டி சுமார் 40, 000 சகாராவாசிகள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி இருப்பதாகவும், இவர்களில் அரைவாசிப் பேர் அல்ஜீரியாவை அடைந்துள்ளனர் என்றும் ஏனையோர்கள் மேற்க்கு சகாராவின் ஒதுக்குப்புறப் பகுதிகளில் ஒளிந்திருப்பதாகவும் தெரிவித்தது. இதனால் மேற்கு சகாரா முக்கிய நகரப் பகுதிகள் கைவிடப் பட்ட பிசாசு நகரங்கள் போல் காட்சியளித்தன. 1976 ஆம் ஆண்டு ஒக்டோபரில் அல்ஜீரிய அரசாங்கம் சுமார் 50,000 மேற்கு சாராவாசிகள் தனது நாட்டின் எல்லைப் புறப் பகுதிகளில் அகதிகளாக் தஞ்சம் அடைந்திருப்பதை ஐ. நா அகதிகள் விடயங்களுக்குப் பொறுப்பான ஆணையாளருக்கு அறிவித்தது.

தெற்கு மொரோக்கோ வடக்கு மொறிட்டானியா ஆகிய இடங்களில் இருந்தே பெருமளவில் அகதிகள் வந்திருந்தனர் 1983 ஆம் ஆண்டளவில் 22 முகாம்களில் இருந்த அகதிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சமாக அதிகரித்திருந்தது.

ஆரம்பத்தில் இந்த அகதிகள் முகாம்களில் பெரும் அசௌகரியங்கள் காணப்பட்டன சுமார் 1000 குழந்தைகள் வரை தட்டம்மை நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்திருந்தனர் என்றும் கூறப்பட்டது.

இத்தகைய அசௌகரியங்கள் படிப்படியாக் நாளடைவில் குறைவடையத் தொடங்கின பொலிசாரியோ இயக்கம் றெட்கிறெசன்ட் என்ற அல்ஜீரிய ஸ்தாபனம் ஒன்றின் உதவியுடன் இந்த முகாம்களை நன்கு பரிகரிக்கத் தொடங்கியது. ஒவ்வொரு முகாமும் மிகச் சிறந்த வகையில் உணவு, உடை, கல்வி சுகாதார வசதிகள் மற்றும் தொழிற் பயிற்சிகள் என்பனவற்றுடன் நிர்வகிக்கப்பட்டன.

### சகாரா அரபு ஜனநாயக குடியரசு

1976 ஆம் ஆண்டு பெப்- 27ஆம் திகதி பிரதேச தேசிய கவுன்சிலினால் சாகரா அரபு ஜனநாயக குடியரசு என்ற அமைப்பு அறிவிகப் பட்டது ஸ்பானிய நிர்வாகத்தினால் கைவிடப்பட்ட அதிகார வெற்றிடத்தை நிரப்பும் வகையிலேயே அறிவிக்கப்பட்டது.

## தொடர் 2

இப் புதிய குடியரசின் அமைச்சர்கள் கவுன்சில் பின்னர் ஒரு வார காலத்தில் 1976 மார்ச் 4 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது இதன் பிரதமராக மொகமட் லெமாயின் ஒல்ட் அகமட் என்பவர் நியமிக்கப்பட்டார். 'வுரிபியன்' என்ற ஒரு சிறு இனத்தின் பிரதிநிதியான இவர் 1940 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிறந்தவராவர் இவர் 1982 அக்டோபர் வரை பிரதம மந்திரியாக இருந்தார் இவரைத் தொடர்ந்து பொலிசாரியோ இயக்கப் பிரமுகரான 'மௌவ்புட்' அலிபீபா என்பவர் பிரதமரானார் 1953 ஆம் ஆண்டில் பிறந்த இவர் மேற்கு சகாரப் பாடசாலைகள் சில வற்றில் கல்வி பயின்றார்.

1983 ஆம் ஆண்டில் சகாரா அரபு ஜனநாயகக் குடியரசை அரபு நாடுகள் அங்கீகரித்தன இந் நாடுகள் அனைத்தும் 3 ஆக் உலக நாடுகள் ஆகும். ஆபிரிக்காவில் 27 நாடுகளும், ஆசியாவில் 8 நாடுகளும் இலத்தீன் அமெரிக்க கரீபியன் பகுதிகளில் 13 நாடுகளும் ஓசானியா கடல் பகுதிகளில் 6 நாடுகளும் அங்கிகாரத்தை வழங்கியவற்றில் அடங்குகின்றன.

### பொலிசாரியோ இயக்கத்திற்கும் மொறிட்டானியாவிற்கும் இடையிலான போர்

மேற்க்கு சகாராவை ஆக்கிரமிப்பதிலும் பிரிப்பதிலும் மன்னர் ஷசலுடன் சேர்ந்து மொறிட்டானியாவை போரில் ஈடுபடுத்தியிருந்த அதன் அதிபர் மொட்டா ஊல்ட் டாடா பிரபல்யம் அற்ற வெல்ல முடியாத போராக மக்கள் மத்தியில் இப் போர் செல்வாக்கிழந்திருந்தது. மொறிட்டானியாவின் பொருளாதாரத்தினை இது பாதித்தது.

### பலவீனமான தொடர்பு

மொறிட்டானியாவை பொலிசாரியோ இயக்கம் தனிமைப் படுத்தி இருந்தது இதன் மூலம் மொரோக்கோ மொறிட்டானியா கூட்டினை தகர்ப்பதே பொலிசாரியோவின் நோக்கமாக இருந்தது இதனால் மொறிட்டானியா தனது இராணுவத்தை மூவாயிரத்திலிருந்து 20,000 ஆக அதிகரித்திருந்தது இந்த இராணுவம் மேற்கு சகாராவுடன் இணைத்திருந்த பகுதிகளை பாதுகாக்க வேண்டி இருந்ததுடன் மொறிட்டானியாவிற்குள் விரைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னேறிய பொலிசாரியோ கொரில்லாக்களையும்சமாளிக்கவேண்டியதாயிற்று. இதே வேளை பொலிசாரியோ இயக்கம் ஜீன் 1976, ஜீலை 1977 ஆகிய இரு ஆண்டுகளிலும் மொறிட்டானியாவில் குறிப்பிடத்தக்க தாக்குதல்களையும் தீவிரவாத நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. இவற்றில் மொறிட்டானியா ஜனாதிபதி மாளிகையைத் தாக்கியது. 'சுவாரட்' இரும்புச் சுரங்கக் கைத்தொழிலை நிறுத்தியது 6 பிரஞ்சு நிபுணர்களைக் கடத்தியது. என்பன குறிப்பிடத்தக்கது.

மொறிட்டானியா தன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து விரக்தி நிலைக்குள்ளானது. இதனால் அதிபர் ஊல்ட்டாடா மொரோக்கோ பிரஞ்சு இராணுவ உதவியைக் கோரினார் 1977 மே 13 ஆம் திகதி அவர் மொரோக்கோவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். இதனால் 9 ஆயிரம் மொரோக்கோ துருப்புக்கள் அந்த ஆண்டில் மொறிட்டானியா வந்தனர். 'பிரஞ்சு, மொறிட்டானியா இராணுவ ஒப்பந்தம ஒன்று ஏற்கனவே 1976 ஆம் ஆண்டு செய்யப்பட்டிருந்தது இதனால் சகல பிரிவுகளிலும் இருந்து பிரஞ்சு துருப்புகளை வரவழைக்கும் சாத்தியம் காணப்பட்டது. 1977 ஆம் ஆண்டு மொறிட்டானியாவில் பிரஞ்சு நிபுணர்கள் கடத்தப்பட்ட சம்பவம் இச் சாதக நிலைமைக்கு மேலும் வலுவூட்டியது பிரஞ்சு ஜகுவார்' போர் விமானங்கள் 1977 டிசம்பரில் மொறிட்டானியாவின் வடக்குப் பகுதியில் இருந்த கொரில்லா நிலைகளை தாக்கத் தொடங்கின இதனையடுத்து 77 டிசம்பரில் பிரஞ்சு கைதிகள் விடுதலையானார்கள். ஆயினும் பிரஞ்சு விமானத் தாக்குதல் 1978 ஏப்ரல் மாதத்திலும் இடம் பெற்றது.

## மொறிட்டானியா அதிபரின் வீழ்ச்சி

கொரில்லா நிலைகள் மீது பிரஞ்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியிருந்த போதிலும் அந்த இயக்கத்தின் கெடுபிடிகளை நிறுத்த முடியவில்லை மொறிட்டானியாப் பொருளாதாரம் மோசமான சரிவுநிலையை அடைந்து வந்தது வெளிநாட்டுக் கடன் தொகை 711 கோடி அமெரிக்க டொலர்களையும்எட்டி இருந்தது இராணுவ வட்டாரங்களிலும் கீழ்படிவின்மை ஒழுக்கக்கேடு என்பன வெளிப்பட ஆரம்பித்தன. இதனையடுத்து 1978ஆம் ஆண்டு யூலை 9 ஆம் 10ஆம் இடைப்பட்ட இரவில் மொறிட்டானியா இராணுவம் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியது இவ் ஆட்சி மாற்றத்தை அடுத்து இரு தினங்களில் பொலிசாரியோ இயக்கம் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்தது புதிய அரசாங்கத்துடன் நல்லெண்ணத்தை ஏறபடுத்துவதே இதன் நோக்கமாகும்.

## அல்ஜீரியா உடன்படிக்கை

மொறிட்டானியா இராணுவத்தின் சமாதானத்திற்கான பாதை இலகுவானதாக இருக்கவில்லை மொரோக்கோ மன்னர் ஷசன் பொலிசாரியோ இயக்கத்துடனான தனது நட்புகள் குறித்து எந்த வகையில் நடந்து கொள்வார் என்ற பீதி அந்த இராணுவத்திடம் காணப்பட்டது சர்வதேச ரீதியில் மொரோக்கோவில் பொலிசாரியோ இயக்கத்திற்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்த மொறிட்டானியா இராணுவம் முயன்றது. இச் சமாதான திட்டத்திற்கு மொறிட்டானியா 'ரைறிஸ் எல் காபியோ பகுதியை பொலிசாறியாவிற்கு வழங்கும் மேற்கு சாகராவில் மொரோக்கோ அதன் பங்கை கொண்டிருக்கவும் உடன்பட்டிருந்தது இந்தத்திட்டம் மொரோக்கோவையோ, பொலிசாறியோவையோ திருப்திப்படுத்தவில்லை இதேவேளை மொறிட்டானியாவின் பொருளாதார நிலை தொடர்ந்து பாதிப்புற்ற நிலையில் இருந்து வந்தது. இராணுவ ஆட்சியாளரிடையேயும் பிளவுகள் தோன்றலாயின இதனையடுத்து புதிய இராணுவ ஆட்சிப் பிரிவொன்று 1979ஆம் ஆண்டு ஏப்பிரலில் ஆட்சிக்கு வந்தது பொலிசாரியோ இயக்கம் ரைறிஸ் எல் காபியாட் பகுதி தனக்கு கிடைக்காததால் 1979 ஆம் ஆண்டு ஜீலை 12 ஆம் திகதி போர் நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டது தொடர்ந்து ரைறிஸ் எல்காபியாப் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றையும் அதன் தலைவனையும் கைது செய்தது இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சியாளரிடையே ஒரு மாற்றம் ஏற்படலாயிற்று. மொரோக்கோமீது கொண்ட பீதி காரணமாக மொறிட்டானியா இராணுவஆட்சிஅல்ஜீரியாவுடன் 1979 ஓகஸ்ட் 5ஆம் திகதி சமாதான உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டது அதில் மொறிட்டானியா ஸ்லாமியக் குடியரசு மேற்கு சகாரா மீது எவ்வித பிரதேச உரிமையையோ கொண்டிருக்க மாட்டாதென்று தியாய மற்ற மேற்கு சகாரா யுத்தத்தில் இருந்து வாபஸ் பெறப் போவதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது இந்த ஒப்பந்தத்தில் இரகசிய பிற் சேர்க்கையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்க்குசகார்ரார்வில்தனதுதிலேயை வாபஸ் பெறுவதுடன் பொலிசாரியோ இயக்கத்திடம் தனது கட்டுப்பாட்டில் உள்ள மேற்க்கு சாக்ராப் பகுதியை இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 7 மாத காலத்தில் மீளக் கையளித்தார்கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது

மேற் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பிற் சேர்க்கைப் பகுதியை அமுல் படுத்துவது சிரமாக இருந்தது மொறிட்டானியாவில் இருந்து மொரேக்கோத் துருப்புக்கள் படிப்படியாக வாபஸ் பெற்ற போதிலும் ரைறிஸ் எல் காபியாப் பகுதியை 1979 ஆகஸ்ட் 14ஆம் திகதி மொரேக்கோவின் ஒரு மாகாணமாகப் பிரகடனப்படுத்தியது மொறிட்டானியாப் படைகள் உடனடியாக வெளியேறின. இதனையடுத்து மொரேக்கோ மொறிட்டானியா உறவில் விரிசல் ஏற்படலாயிற்று மொரேக்கோ அடிக்கடி மொறிட்டானியாவை பொலிசாரியோ சக்திகளை ஊடுருவல்களுக்கு அனுமதித்தமைக்காக கடிந்து கொண்டது.

## பொலிசாரியோ மொரேக்கோ யுத்தம்

மேற்க்கு சகாராவைச் சேர்ந்த மூன்று பகுதிகள் 1976 ஆம் ஆண்டு ஏப்பரலில் மொரேக்கோவுடன் சேர்க்கப்பட்டது நான்காவதாக 1979இலும் ரைறிஸ் எல் காபியா என்ற பெயருடன் மொரேக்கோவுடன் இணைக்கப்பட்டது. இதே வேளை பொலிசாரியோ இயக்கத்தின் 'கற்ரேப்' தாக்குதல் பிரிவு தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது மொரேக்கோத் துருப்புகள் மீது பதுங்கி இருந்து தாக்குதல் என்பன பரவலாக மேற் கொள்ளப்பட்டது

1978 ஆம் ஆண்டு மொறிட்டானியாவில் இடம் பெற்ற புரட்சியை அடுத்து மொரேக்கோ இராணுவத்தின் இழப்புகள் பன்மடங்காயின பொலிசாரியோ இயக்கம் தெற்கு மொரேக்கோப் பகுதியுள் புகுந்து தாக்குதலை நடத்தியது.

உண்மையில் கொரில்லாக்கள் தமது 1979 80ஆம் ஆண்டுகளில் மேற் கொண்ட பிரசாரம் ஒன்றில் பெரும் வெற்றி கண்டார்கள் முதல் தடவையாக மொரேக்கோவின் பெயியள் இருந்த நகிரங்கள் தளங்கள் யாவும் தாக்கப்பட்டன (உ+) 1979ஆம் ஆண்டு ஜன 28ஆம் திகதி ஒரு பெருந்தொகையான கொரில்லா வீரர்கள் ரான்-ரான் என்ற தெற்கு மொரேக்கோவின் மாகாண தலைநகரில் பெருந்தொகையான துருப்புகளுடன், மோதியதுடன் விமானத்தளம் ஒன்றையும் எதிர் கொண்டன. 1979 ஆகஸ்ட் 11ஆம்தேதி வே என்சாரின்' என்ற மொரேக்கோவின் நிலை ஒன்றின் ஒரு பகுதி கொரில்லாக்கள் வசமானவை. 1979 ஒக்டோபர் 6ஆம் திகதி கொரில்லாக்கள்சகாராவின் பாதுகாப்பு எல்லையையும் தாண்டி முன்னேறினர். பின்னர் அங்கிருந்த 700 உள்ளூர் வாசிகளை அல்ஜீரியாவிற்கு வெளியேறச் செய்தனர். இதனையடுத்து பிரஞ்சு எவ்பஸீயர் படைகளுடன் மொரேக்கோத் துருப்புகளும் சேர்ந்து 1983 ஆம் ஆண்டளவில் மொரேக்கோ படைப்பலம் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பின் நோக்கம் தெற்கு மொரேக்கோவின் கொரில்லாக்களை முறியடிப்பதே.

—தொடரும்—

## தோட்டத்...:.

(6ம் பக்கீ தொடர்ச்சி)

கிராமப்புற வழிய விவசாயிகளுக்கோ இத்தகைய ஒருங்கமைந்த நிச்சயமான தொழில் கிடையாது. ஆனால் உணவு முத்திரை, வேலையற்றோருக்கான சகாயப்படி வயோதிபர் அங்கவீனர் விதவைக்கானதர்மப்படிபோன்ற அரசாங்க சகாயநிதிகளும், வங்கியில் கடன்பெறுவது மாதிரிக் கிராமங்கள்நிலப்பங்கீடு போன்ற நடவடிக்கை ஆகியவற்றின் சலுகைகளும் ஓரளவு கிடைக்கின்றன. மறுபுறத்தில் கிராமியவாழ்க்கையில் கிடைக்கும் பலா, பாக்கு தேங்காய், நெல் போன்றபொருட்கள் சிறிதளவாவது தேவைகளை ஈடு செய்கின்றன. மலையக தொழிலாளருக்குஇந்த சலுகைகளும் வாய்ப்புக்களும் கிடையாது அவர்கள் விறகைத்தவிர அனைத்தும் பணம் கொடுத்தேவாங்க வேண்டும்.

இதைக் தவிர மலையக தமிழ் தொழிலாளர் பிரத்தியேகமாக தேசிய இன ஒடுககு முறைக்கு முகம்கொடுக்கின்றனர். எல்லா துறைகளிலும் சுரண்டலுடன் இவ்வடக்குமுறை இணைந்துள்ளது. இந்த தேசிய அடக்குமுறை சிங்கள மக்களுக்கு இல்லாத ஒன்று எனவே தான் மலையக தொழிலாளர்ஏனையமக்களை விட மிக மோசமான நிலையில் துயரங்களை அநுபவிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் காலனியா முறையின் கீழ் மிக மோசமாக சுரண்டப்படும் ஒரு தொழிலாளவர்க்கமாக மாத்திரமன்றி இந்நாட்டில் மிக மோசமாக அடக்கி ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனமாகவும் உள்ளனர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. கம்யூனிஸ்ட்களாகிய நாம், எந்த வேலையைச் செய்தாலும் அதில் கையாள்வதற்கு இரண்டு முறைகள் உள்ளன: ஒன்று பொதுவானத்தைக் குறிப்பிட்ட ஒன்றோடு பொருத்துவதாகும், மற்றொன்று தலைமையை மக்களோடு இணைப்பதாகும்.

2. எந்தப் பணியிலும் பொதுவான, பரவலான அறைகூவலை விடப்படா விட்டால், பரந்து பட்ட மக்களை செயலுக்கு ஒன்று திரட்ட முடியாது. ஆனால் தலைமை இடத்தில் உள்ள நபர்கள் ஒரு பொதுவான அறை கூவலுடன் மட்டும் தங்களைக் குறுக்கிக் கொண்டால்- அவர்கள் தாங்களே நேரடியாக சில அமைப்புகளில், அறைகூவல் விடப்பட்ட பணியில் ஆழ இடங்களில் சாதனைகள் ஏற்பட்டன: இந்த வழிமுறை பயன்படுத்தப் படாத இடங்களில் சாதனைகளே இல்லை. 1943-ம் ஆண்டு சீர்செய் இயக்கத்தில், மத்தியக் கமிட்டியின் ஒவ்வொரு பிரிவும், துணைப்பிரிவும், ஒவ்வொரு பிரதேசத்தின் கட்சிக்குழுவும் கட்சிச் செயல் குழுவும் ஒரு பொதுவான அறை கூவலை விட்டது. தன் (ஆண்டு முழுமைக்குமான ஒரு சீர் செய் இயக்கத்திடம்) செயல் இயக்கதில் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு, கீழ்க்கண்ட வகைகளைச் செய்ய வேண்டும். அமைப்புக்குள் இருந்தும், மற்றும் அருகிலுள்ள பிற அமைப்புகள் பள்ளிகள் அல்லது இராணுவக் குழுக்கள் ஆகியவற்றில் இருந்தும் இரண்டு அல்லது மூன்று குழுக்களை ஒவ்வொரு அமைப்பும், பள்ளியும், அல்லது ராணுவ குழுவும் ஏராளமான கீழ்மட்டக் குழுக்களைப் பெற்றிப்பதால் அவற்றின் தலைவர்கள் அதே போல் செய்ய வேண்டும். மேலும் இந்த வழிமுறையைக் கொண்டுதான் தலைவர்கள் தலைமை தாங்குதல், கற்றுக் கொள்ளுதல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைக்கின்றார்கள். தலைமை இடத்தில் உள்ள எவரும், குறிப்பிட்ட நபர்களிடம் இருந்தும் குறிப்பிட்ட கீழ் மட்டக் குழுக்களின் நிகழ்ச்சிகளில் இருந்தும் குறிப்பான அனுபவங்களை பெறாமல் இருந்தால் அவருககு எல்லாக குழுககளுககும் பொவாதுன வழிகாட்டுதலை

# தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள்

மாகவும், குறிப்பாகவும் சென்று, சில குறிப்பிட்ட புள்ளியில் ஒரு சாதனையை ஏற்படுத்தி, அனுபவதைப் பெற்று, அந்த அனுபவத்தைப் பிற குழுக்களை வழி நடத்துவதற்கு பயன் படுத்தாவிட்டால் -அப்போது அவர்களால் தங்களுடைய பொதுவான அறைகூவலின் சரியான தன்மையைச் சோதிக்கவோ அல்லது அதன் உள்ளடக்கத்தை வளர்தெடுக்கவோ அவர்களுக்கு வேறு வழியில்லை; அதிலிருந்து ஒன்றும் கிடைக்காமல் போகக்கூடிய அபாயம் உள்ளது. 1942-ம் ஆண்டு சீர்செய் இயக்கத்தில் (Rectification movement) எடுத்துக் காட்டாக பொதுவான அறைகூவலை குறிப்பானதுடன் இணைக்கும் வழிமுறையும் குறிப்பான வழிகாட்டுதலும் பயன் படுத்தப்பட்ட (மிகப் பல குழுக்கள் கூடாது) தேர்ந்தெடுங்கள். அந்த குழுக்களைப் பற்றி ஒரு முழுமையான ஆய்வை நடத்துங்கள், அவைகளில் சீர் செய் இயக்கத்தின் வளர்ச்சி பற்றி ஒரு விரிவான அறிவையும் அவைகளில் உள்ளவர்களின் சில பிரதிநிதிகளுடைய(அநேக பேர் அல்ல) அரசியல் வரலாறு, தத்துவார்த்த அறிவு ஆய்வில் உள்ள ஆர்வம், வேலையில் அவர்களுடைய பலமான, பலவீனமான அம்சங்கள் ஆகியவற்றைப் பற்றி ஒரு விரிவான அறிவையும் பெறுங்கள் மேலும் அந்தக் குழுக்கள் எதிர் நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சனைகளுக்கு குறிப்பான தீர்வுகள் காண்பதற்கு அவற்றின் பொறுப்பில் உள்ள வர்களுக்கு தனிப்பட்ட நேரடி வழிகாட்டுதலை (Personal guidance) அளிக்கவும் அளிப்பதற்குத்தகுதியில்லை எல்லா மட்டங்களிலும் உள்ள முன்னணி ஊழியர்கள் செயல்படுத்தப் பழகும் வகையில் இந்த வழி முறை எல்லா இடங்களிலும் வளர்க்கப்படவேண்டும்.

3. இயக்கத்தின் போது மிகக்குறைந்த எண்ணிக்கையில் செயல் வீரர்களையும், குறிப்பிட்ட குழுக்களின்தலைவர்களையும் கொண்ட ஒன்றை மையமாகக் கொண்ட ஒரு தலைமைக்குழு உருவாககப் படுதலும், இந்த தலைமைக குழு தன்னை இந்த இயககத்தில பங்கேற்கின்ற பரந்துபட்ட மககளிடையே நெருககமாகப் பிணைத்துக கொள்வதும் சீர்செய் இயககத்தின் வெற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றிக்கு அவசியமானது என்பதை 1942-ம் ஆண்டு சீர் செய்யும் இயக்கமும் நிருபிக்கிறது. தலைமைக் குழு எவ்வளவுதான் தீவிரமாக இருந்தாலும், அதனுடைய நடவடிக்கை பரந்துபட்ட மக்களின் நடவடிக்கையுடன் ஒன்றிணைக்கப் படவில்லையென்றால் அந்த நடவடிக்கை ஒரு சில குறிப்பிட்ட நபர்களின் பயனற்ற முயற்சியாகவே அமையும் அதே சமயத்தில், பரந்துபட்டமக்களின் நடவடிக்கையை முறையாக ஒன்று திரட்ட ஒரு சக்தி வாய்ந்த தலைமைக்குழு இல்லையென்றால், அந்த நடவடிக்க்கையை நீண்ட காலத்திற்கு நீடிக்கப் படவோ, அல்லது சரியான திசையில் முன்கொண்டு செல்லப்படவோ அல்லது ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படவோ முடியாது, எந்த இடத்திலும் மக்கள் பொவாக ஒப்பு நோக்குகையில்,தீவிரமானது, இடைப்பட்டது, பின் தங்கியது என்ற மூன்று பிரிவுகளை உடையதாக இருக்கின்றனர். எனவே குறைவான எண்ணிக்கையில் உள்ள தீவிரமுள்ள நபாகளை தலைமையைச் சுற்றி ஒன்று படுத்துவதில் திறமையுள்ளவர்களாக தலைவர்கள் இருக்க வேண்டும். இடைப்பட்ட நபர்களின் நிலையை உயர்த்தவும், பின் தங்கிய நபர்களை வென்றெக்கவும் தலைவர்கள் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டும். பரந்துபட்ட மக்களுடன் உண்மையிலேயே ஒன்று பட்ட உறவு கொண்ட ஒரு தலைமைக் குழு பரந்து பட்ட டிக்கள் போராட்டத்தின் இயக்கத்தில் தான் படிப்படியாக உருவாக முடியுமே ஒழிய, அதிலிருந்து தனிமைப் பட்டு உருவாக முடியாது ஒரு பெரிய போராட்டத்தின் இயக்கத்தில் அனேகவற்றில் தலைமைக்குழுவின் அமைப்பு, முதல், இடைக்கடைக் கால,கட்டங்கள் முழுவதும் மொத்தத்தில் மாருமல் அப்படியே இருக்கக் கூடாது இருக்க முடியாது: ஒப்பு நோக்குகையில் தாழ்ந்த அல்லது பின் நோக்கிச் சென்றிருக்கிற தலைமைக் குழுவில் ஏற்கனவே இருக்கிற நபர்களை அகற்றுவதற்கு போராட்டத்தின் போது முன் வருகின்ற தீவிர செயல் வீரர்க்ள் தொடர்ந்து பதவி உயர்த்தப் பட வேண்டும். அநேக இடங்களில் அநேக அமைப்புகளில் வேலைகள் முன் நோக்கி தள்ளப் படாமல் இருப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணம் பரந்து பட்ட மக்களுடன் ஒன்று பட்டதும் உறவு கொண்டதும் தொடர்ந்து நன் முறையில் தன்னை வைத்துக் கொள்ளக் கூடியதுமான ஒரு தலைமைக்குழு இல்லாததேயாகும். உண்மையான நிலைமைகளுக்கு ஏற்ற் வகையில் உருவாக்கப்பட்ட (செயற்கையாக மொத்தத்தில் தூக்கியெறியாமல்) மிகத் தீவிரமான, நேர்மையான, கவனமிக்க ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்க்ள் மாணவர்களை உள்ளடக்கியதான பல நபர்களை அல்லது ஒரு டஜன் அல்லது கொஞ்சம் அதிகமான நபர்களைக் கொண்ட ஒரு தலைகைக் குழுவைப் பெற்று இருக்கவில்லையென்றால் நூறு பேர்களைக் கொண்ட பள்ளிக்கூடம் நன்கு இயங்க முடியாது, ஒவ்வொரு அமைப்பிலும். பள்ளியிலும், படைப்பிரிவிலும், ஆலையிலும், அல்லது கிராமத்திலும் கட்சியை போல்ஷிவிக் மயமாக்குதற்கான ஸ்டாலினின் பன்னிரெண்டு நிபந்தனைகளில் ஒன்பதாவது நிபந்தனையை அதாவது தலைமையின் ஒரு மையத்தை நிறுவுவதை நிறைவேற்ற வேண்டும். டிமிட்ரோவ் முன்னணி ஊழியர் கொள்கை பற்றிய தனது விவாதத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு அளவு கோல்களே- லட்சியத்திற்கு பரிபூரணமாண ஆர்பணிப்பு, மக்களுடன் தொடர்பு, ஒன்றின் திசையை தானே தனித்து அறியும் திறமை, கட்டுப்பாட்டைக் கடைபிடித்தல் -மேற் கூறப்பட்ட ஒரு தலைமைக் குழுவிற்கு உரிய அளவு கோல்களாகும். பிரதான -பணிகளை யுத்தம், உற்பத்தி, கல்வி (சீர்செய்து கொள்ளுதல்உட்பட) ஆகியவற்றை- செயல்படுத்துவதிலும் சரி அல்லது வேலைகளை சரிபார்ப்பது, ஊழியர்களின் வரலாற்றைஆராய்வது அல்லது பிற நடவடிக்கைகளிலும் சரி, பொதுவான அறைகூவலை குறிப்பிபிட்ட வழிகாட்டுதலுடன் இணைக்கும் வழிமுறையோடு, தலைமைக் குழுவை பரந்து பட்டமக்களுடன் தொடர்புபடுத்தும் வழிமுறையையும் மேற் கொள்வது அவசியமானதாகும்.

4. நம்முடைய கட்சியின் எல்லா நடைமுறை வேலைகளிலும், எல்லாச் சரியான தலைமையும் அவசியமாக '' மக்களிடமிருந்து, மக்களுக்காக'' அமைய வேண்டும். இதன் பொருள் என்னவென்றால்: மக்களின் கருத்துக்களை (சிதறியும் முறையற்றும் கிடக்கிற கருத்துக்கள்) எடுத்துக் கொள்ளவும், அவற்றில் கவனத்தை மையப்படுத்தவும் (ஆய்வின்மூலம் அவற்றைமையப் படுத்தப்பட்ட, முறையுள்ள கருத்துகக்ளாக மாற்றி அமைக்கவும்) அதன் பின் மக்களிடம் சென்று, அந்த கருத்துக்களை அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களை அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களாகத் தழுவிக் கொண்டு, அவற்றுடன் தங்களை உறுதியாப் பிணைத்து, அவற்றைச் செயலில் நடைமுறைப்படுத்தும் வரை அந்தக் கருத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைப் பிரச்சாரம் செய்யவும், தெளிவுபடுத்தவும், அப்படிப்பட்ட நடவடிக்கைகளின் போது அந்த கருத்துக்களின் சரியான தன்மையைச் சோதிக்கவும் வேண்டும் என்பதேயாகும்.

அந்தக் கருத்துகள் பாது காக்கப்படவும். செயல்படுத்தப் படவும் செய்யும் வகையில் மறுபடியும் மக்களிடமிருந்து வருகிற கருத்துக்களில் கவனத்தை மையப்படுத்தவும் மறுபடியும் மக்களிடம் செல்லவும் வேண்டும். ஒரு முடிவற்ற சுருள் வட்ட அடிப்படையில் மேலும் மேலும் அவ்வாறு செயயச் செய்ய, அந்தக் கருத்துக்கள் ஒவ்வொரு தடவையும் மிகவும் சரியானதாகவும் மிகவும் அவசியமானதாகவும் வளர்ச்சியுடையதாகவும் மாறுகிறது. இது தான் அறிவைப் பற்றிய மார்க்சிய தத்துவமாகும்.

5. ஒரு அமைப்பில் அல்லது ஒரு போராட்டத்தில் தலைமைக் குழுவிற்கும் பரந்து பட்ட மக்களுக்கும் இடையிலான ஒரு சரியான உறவு பற்றிய கருத்து, தலைமையைப் பொறுத்த மட்டில் சரியான கருத்துக்கள் என்பது ''மக்களிடமிருந்து மக்களுக்கு'' என்பதிலிருந்தே வர முடியும் என்ற கருத்து. தலைமையின் கருத்துக்கள் நடைமுறையில் செயல் படுத்தப்படும் போது பொதுவான அறைகூவலானது குறிப்பிட்ட வழிகாட்டுதலுடன் இணைக்கப் படவேண்டும் என்ற கருத்து ஆகிய மேற்கண்ட கருத்துக்கள், இவை சம்பந்தப்பட்ட விஞக்களில் நம்முடைய ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தவறுகளைத் திருத்துவதற்காக தற்போதைய சீர்செய் இயக்கத்தின் போது எல்லா இடங்களிலும் பரப்பப்படவேண்டும். அநேக தோழர்கள் செயல்வீரர்களை ஒன்றிணைத்து ஒரு தலைமையத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனை செயல்ப்படுத்துவதில் நன்ருகயில்லை; எனவே அவர்களுடைய தலைமை அதிகார வர்க்கத் தன்மையுடையதாகவும், பரந்துபட்ட மக்களுடமிருந்து துண்டிக்கப்பட்டதாகவும் மாறுகிறது. அநேக தோழர்கள் பரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் அனுபவங்களைத் தொகுப்பதின் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனைச் செயல் படுத்துவதில் நன்ருகயில்லை; ஆனல் தங்களை அறிவாளிகளாகக் கற்பனை செய்து கொண்டு, தங்களுடைய அகநிலைக் கருத்துக்களை ஒலிப்பதிலேயே விருப்பமுள்ளவர்களாக இருக்கின்ருர்கள்; அதனுல் அவர்களுடைய கருத்துக்கள் ஒன்றுமில்லாததாகவும், நடைமுறைச் சாத்தியம் அற்றதாகவும் இருக்கிறது. அநேக தோழர்கள் ஒரு பணியை பொறுத்த மட்டில் பொதுவான அறைகூவலை விடுவதுடன் திருப்தி அடைந்து கொள்கிருர்கள், அவர்கள் அதனை உடனடியாக குறிப்பிட்ட ஸ்தூலமான வழி காட்டுதலுடன் பின்பற்றுவதின் முக்கியத்துவத்தைப் பார்க்க வில்லை அல்லது அதனைச் செயல் படுத்துவதில் சரியில்லை: எனவே அவர்களுடைய உதடுகளில், அல்லது மகாநாட்டு அறையில் தான் நீடிக்கிறது, அவர்களுடைய தலைமை அதிகார வர்க்கத் தன்மையுடையதாக மாறுகிறது. தற்போதைய சீர் செய் இயக்கத்தில் இந்தக் குறைபாடுகளை நாம் சரி செய்ய வேண்டும்: நம்முடைய ஆய்வில், பணியை பற்றிய சோதனையில், ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வதில் நாம் தலைமையை பரந்து பட்ட மக்களுடன் ஒன்றிணைக்கிற: பொதுவானதை குறிப்பிட்டதுடன் ஒன்றிணைக்கிற வழிமுறைகளை பயன் படுத்த அறிய வேண்டும்: மேலும் நாம் இந்த வழிமுறைகளை நம்முடைய எல்லா எதிர்காலப் பணிகளில் செயல்படுத் வெண்டும்.

மா-சே-துங் (வளரும்)

நன்றி: சமரன் - புரட்டர்தி-1979

---

## போராட்டத்தில் பெண்...

(24ம்பக்க தொடக்சி)

நம்புகிறேம். ஏனெனில் பெண் விடுதலையின் முக்கிய பகுதியே தேசிய விடுதலை '' என்கிருர்.

மூன்ரும் உலக நாடுகளின் சகல பெண்கள் போராட்டங்களும் அரசியல், பொருளாதார சமநிலையின்மையை நீக்கல் விடுதலை என்பவற்றுடன் தவிர்க்க முடியாத விதத்தில் தொடர்பு கொண்டதுடன் ஆண் - பெண் சமத்துவத்தையும் புரட்சிகரமாற்றத்தை நோக்கிச் செல்லும் சிக்கலான போக்குகளையும் கொண்டுள்ளன. இவை பெண் விடுதலைகான பாதையைச் சிக்கலாக்கியுள்ளதுடன் பூதாகரமாக உருவெடுத்துள்ள வறுமை பெண் ஒடுக்குமுறையை மூடி மறைத்து பெண்கள் தொடுத்துள்ள போராட்டத்தில் சர்வதேச ரீதியில் பெண்களுக்கிடையிலான ஒற்றுமையையும் அதிகரிக்கின்றது. சர்வதேசரீதியான பெண்களுடன் எமது தமிழ்த்தேசியஇனப் பெண்களை ஒப்பிடுகையில் பாரம்பரியமான பல கட்டுப்பாடுகளைத் தாண்டி வர வேண்டியவர்கள். இன்றுதமிழ்த்தேசிய விடுதலை இயக்கங்களில் பெண்கள் தமது பங்களிப்பைச் செய்கின்றனர். ஆனல் சமூகத்தில் மட்டுமன்றி விடுதலை ஸ்தாபனங்களில் கூட பூரண சமத்துவம் உரிமை என்பவற்றை பெண்கள் பெற போராட வேண்டியது அவசியமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டத்தில் பெண்கள்- ஒரு கண்ணோட்டம்

வரலாற்றின் சகல கட்டங்களிலும் நடைபெற்ற போராட்டங்களில் பெண்கள் முக்கிய பங்கை வகித்து வந்துள்ளனர். லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களிலும் ஸ்பானியருக்கு எதிரான கிளர்ச்சிகளிலும், தென் ஆபிரிக்காவின் தேசிய விடுதலை இயக்கத்திலும் வியட்னாமில் நீண்டகாலப் பாரம்பரியத்தை கொண்டதான எதிர்ப்பியக்கத்திலும் பெண்கள் பங்களிப்புகளைச் செய்தனர். கி. பி 248ல் ட்றியூதிட்றின் என்ற கிராமியப்பெண் சீனருக்கு எதிரான கலகம் ஒன்றினை வழி நடத்தினர். இவ்வாறாகப் பல போராட்டங்களில் பெண்கள் ஈடுபட்ட போதும், அவை மிக அரிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை வரலாற்றில் பெண்களுடைய இடம் திட்டமிட்டு மறுக்கப்பட்டதையே தெளிவுபடுத்துகிறது.

போராட்ட இயக்கங்கள் தொழிற்சங்கங்கள் போன்ற பலவற்றில் பெண்கள் செயற்பட்ட போதும் எல்லாவற்றின் இறுதியிலும் ஆண்களை விடக் குறைவானவர்கள், இரண்டாந்தரப் பிரஜைகள், குழந்தைகளைப் பெறுதற்குரியவர்கள், உள்வீட்டு வேலைக்காரிகள் என்ற கருத்துக்களுக்கும் குறைவின்றி பெண்கள் நான்கு சுவர்களினுள்ளே அடைக்கப்படுகின்றனர். எனினும் இன்று மேற்குநாடுகளைப் போல குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் மூன்றும் உலக நாடுகளிலும் காணப்படுகிறது. மூன்றும் உலகப்பெண்களிடையே ஒருபெண்மைவாத உணர்வின் புரட்சிகரமான வெளிப்பாடு அண்மை ஆண்டுகளில் நிலவுகிறது' ஆயுதம்தாங்கிய போர்கள் 'உட்பட தேசிய விடுதலை இயக்கங்கள் பெண்களுடைய பங்களிப்பு அதிகரித்து வருவதும், பெண்களுடைய உண்மையான விடிவு சோஷலிச புரட்சியொன்றின் பின் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதுடன் ஒன்றிச்சயாக இணைந்திருக்கவில்லையென்ற இரு பிரதான காரணங்களில் இருந்து இவ்வெளிப்பாடு வளர்ச்சியடைகிறது.

மூன்றும் உலகநாடுகளில் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளில் இரட்டைச்சுமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் தேசிய விடுதலைக்காக போராடும் அதே நிலையில் தமது சொந்த விடுதலைக்காகவும் போராட வேண்டியுள்ளது. வறுமை, சுரண்டல் ஆகியவற்றின் பாதகமான விளைவுகளையும் பெண்கள் இரண்டு மடங்கு அனுபவிக்கின்றனர். பால்வர்க்கம் என்பவற்றுக்கும் ஒடுக்குமுறைக்குமுள்ள தொடர்பை இந்தியாவில் இருந்து வெளிவரும் பெண்கள் சஞ்சிகையான 'மனுஷி' தனது ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் பின்வருமாறு விபரித்துள்ளது. ஏழைகள், ஹரிஜனர்கள், ஆதிவாசிகள் ஆகியோரிலும் இந்தியாவிலுள்ள வேறு எந்தவொரு ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்திலும் 50 வீதமானவர்கள் பெண்களன்றோ. இந்தியக் கிராமங்களில்வரட்சியினால் பெண்களே மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். போஷாக்கின்மையாலும், நோயினாலும் முதலில் பீடிக்கப்படுவதும், மரணத்திற்கு முதலில் பலியாவதும், வறுமைக்கு முதலில் உள்ளாவதும்- அதனால் விபசாரத்தில் ஈடுபடுவதும் பெண்களே' என்கிறது. வரட்சிக்காலத்தில் நிவாரணத்திட்டத்தில் நாள் முழுவதும் கூலி வேலை செய்த பின்னர் பட்டினியால் உயிரிழந்த பெண்ணொருத்தியின் கணவன் தனது மனைவியின் மரணத்தை விபரிக்கையில் எமக்கு மிகச்சொற்பமான தானியமே கிடைக்கும். அதுவும் மிகத் தாமதித்தே கிடைக்கும்; முதலில் எனக்கும் பிள்ளைகளுக்குமே உணவளிப்பாள். அவள் தன்னைக் கவனிப்பதில்லை, நானும் பிள்ளைகளும் சாப்பிட்ட பின் அவள் சாப்பிடுவதற்கு எதுவுமே எஞ்சுவதில்லை' என்றார். ஆணாதிக்கம் நிலவும் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள பாரம்பரியங்கள் பெண்களைத் தமது உயிரைக் கூட பெறுமதியற்றதாக நினைக்கச் செய்வதுடன்' தமது தியாகத்தின் மூலம் பத்தினித்தன்மையை வெளிப்படுவதாகவும் கருதச் செய்கின்றன. மிக வறிய நிலையில் உள்ள அன்றாட உணவுத் தேவையை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடிய நாள் வருமானத்தைக் கொண்டுள்ள குடும்பங்களில் பெண்கள் பட்டினியால் மெல்ல மெல்ல இறக்கின்றனர் என மனுஷி மேலும் குறிப்பிடுகின்றது.

பாரிய அளவிலான சமூக, பொருளாதார, கலாச்சார வேறுபாடுகளால் பெண்கள் ஒடுக்கப்பட்ட போதிலும். பால்ரீதியாக பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறையே உலகெங்கும் வியாபித்துக் காணப்படுகிறது. அரசியலானது ஆண்களுடன் தொடர்புடையதாகவும், பெண்கள் ஈடுபட்டால் அத்துமீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றிப் பிரவேசிக்கும் குற்ற உணர்வினைத் தோற்றுவிப்பதாகவும் கருதப்பட்டது பெருமளவு தடைகளைத்தாண்டி விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ள வந்தோர் கூட சமையல் செய்வோராகவும், ஊழியராகவும், போர்வீரர்களை மறைத்து வைத்துக் காப்பாற்றுவராகவும், தாதிகளாகவுமே செயற்பட முடிந்தது சிலிஒமான், எரித்திரியா விடுதலைப் போராட்டங்கள் இதற்கு உதாரணமாகும் இத்தகைய சட்டதிட்டங்களை உடைத்தெறியும், தமது பங்களிப்புகளை ஒன்றிணைக்கவும் எடுக்கும் முயற்சிகள் பெண்களுக்கு மீண்டும் பொறுப்புகள் இரட்டிப்பாவதைக் காட்டுகிறது.

சிலி நாட்டு புரட்சிகர இடதுசாரி இயக்க மத்திய (MIR) குழு அங்கத்துவரான கிளாடிஸ் டயஸ் (Gladys Diaz) 1979ல் வெனிசுலாவில் ஆற்றிய உரையொன்றில் '' அரசியல் அமைப்புக்களிலும், மக்கள் அமைப்புக்களிலும் பெண்கள் தமது இடத்தைப் பெற ஆண்களை விட இருமடங்கு முயற்சித்துப் போராட வேண்டிய நிலையில் உள்ளனர். நாம் முழுமையான பெண்களாக இருப்பதை மிக விரும்புகிறோம். முன்னணியிலோ அல்லது பின்புறத்திலோ நின்று போரிடும்போது குழந்தைகளைப் பெறவும், வளர்க்கவும் புரட்சிகரமான உறவுகளின் பகுதியாக இருக்கவும், தொழிலாளர்களாயிருக்கவும், இல்லங்களைக் கொண்டிருக்கவும் விரும்புகிறோம். என இரட்டை நிலையைக் குறிப்பிடுகின்றார்.

நிக்கரகுவா, கிரெனடா எரித்திரியா போன்ற நாடுகளின் அண்மைக்கால அனுபவங்கள் அரசியற்பங்களிப்புகளில் பெண்களின் வளர்ச்சி நிலையைக் காட்டிநிற்கின்றது. எனினும் கையில் துப்பாக்கி ஏந்திய பெண்ணும் பாலியல் ரீதியாகவே முதலில் கணிக்கப்படுகிறாள். ஆண் மட்டும் தீர்மானம் செய்யும் தன்மை புரட்சிகர அமைப்புக்களிலிருந்து கூட இல்லாதொழிவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என மேற்குலகப் பெண்களும் உணர்கிறார்கள். புரட்சியின் பின் அமைந்த சமூகங்களில் கூட ஆண்-பெண் சமத்துவமின்மையை கியூபா, ஈரான்

> Third world quarerly (1983 புரட்டாதி) என்ற சஞ்சிகையில் போராட்டத்தில் பெண்கள் என்ற கட்டுரைத் தொடரிலிருந்து தொகுக்கப்பட்டது.
>
> தொகுப்பு — மதுரா

மொஸாம்பிக் ஆகிய நாட்டுப் பெண்களின் அனுபவங்கள் உணர்த்துகின்றன. தனது பதினாறு வயதில் வீட்டையும், பாடசாலையையும் விட்டு விலகி பிறேலிமோ (Prelimo) விடுதலை இயக்கத்தில் சேர்ந்த அனபெல்லா ரொட்றிக்கியூஸ் (Awabella Rodriques) எனும் மொஸாம்பிக் பெண் போராளி 1979ல் தனது நாடு விடுதலையடைந்து 4 வருடங்களின் பின் "குடியேற்ற ஆதிக்கம், முதலாளித்துவ ஆதிக்கம் எம்மீது சுமத்தப்பட்டால் எதிரியை இனங்கண்டு இலகுவில் அழிக்க முடியும். ஆனால் எமது சமூகத்தில் தம்முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் பாரம்பரியத்தை அழிப்பது மிகக் கடினம். சமூக அனுமதிச் சடங்குகள், ஒரு ஆணுக்குப் பல மனைவியர், சீதனம் என்பவை எமது சமூகத்திலிருந்து துடைத்தெறிய முடியாத மூன்று பாரம்பரியங்கள்'' என்கிறார். புரட்சிக்குப் பின் நிலவும் சமத்துவமின்மைக்கு சோஷலிச வேலைத்திட்டங்கள் முயற்சிக்காமையும், பெண்களின் தாழ்வுநிலையை கவனத்தில் எடுக்காமையும் காரணமெனக் கூறும் மக்ஸின் மொலி கியூக்ஸ் (Maxine molyuaxs) பெண்ணடக்குமுறையானது ஒரு புரட்சியின் வெற்றியின் பயனாகத் தானாகவே முடிவுக்கு வருமென்கிறார்.

தென்மேற்கு ஆபிரிக்கா மக்கள் அமைப்பின் மாதர் சங்கம் (Swapo Womens Council) ஓமானியப் பெண்கள் அமைப்பு, எல்சல்வடோர் பெண்கள் கூட்டமைப்பு (AMES) போன்ற பல இயக்கங்கள் பெண்களுக்கான விடுதலைக்காகப் போராடும் அதே வேளையில் தேசிய விடுதலையையும் முன்னெடுத்துச் செல்கின்றன. பெண்களுக்குரிய பிரச்சனைகள், அடிப்படை மனித உரிமை, அவ்வுரிமைக்காக எவ்வாறு போராடல். சமூக ஒழுங்கமைப்பில் பெண்களின் பங்கு, கல்வியறிவற்ற பெண்களின் விசேட பிரச்சனைகள், பிரசவக்குழந்தை நலச் செயற்திட்டம் போன்ற பல விடயங்களை ஆராய்ந்து போராடவே இவ் இயக்கங்களின் பணியர்கும் என்பதை ஓமானியப் பெண்கள் இயக்கத்தின் முதலாவது மாநாட்டு அறிக்கை மூலம் அறிய முடிகிறது. தேசிய விடுதலையின் பின்னரே முழுமையான பெண் விடுதலையை அடைய முடியுமென்பதை இவ்வமைப்புகளும் தெளிவுறுத்துகின்றன. எல்சல்வடோர் புரட்சிகர ஜனநாயக முன்னணியின் (F.D.R) அங்கத்தவர் மிரியம் கால்டீம் (Miriamgaldeme) "ஆண் ஆதிக்கமுள்ள சமூகத்தில் எமது விடுதலையானது தேசிய விடுதலையினை நாம் ஈட்டிக் கொள்ளும்வரை ஏற்பட முடியாது என நாம்

(22ம்பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடர்புசாதனங்களுக்கு பொறுப்புணர்ச்சி தேவை!

(நன்றி: அஷ்ஷுரா-மார்ச் ஏப்பிரல், 1984)

பல இனங்கள் சேர்ந்து வாழும் ஒரு ஜனநாயக நாடு இலங்கை. இங்கு தார்மிக ஆட்சி நடைபெறுகிறதாகக் கூறப்படுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகள் பேணப்படுவதாகவும் பிரகடனப்படுத்தப்படுகிறது. இரண்டாவது சிறுபான்மையினராக இங்கு வாழ்பவர்கள் இலங்கைச் சோனகர்கள். பெரும்பான்மையினர் சிறுபான்மையினர்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சௌஜன்யத்தையும் ஏற்படுத்த வேண்டிய பாரிய கடமை பொது ஜனத் தொடர்பு சாதனங்களையே சாரும்.

இலங்கையைப் பொறுத்தவரை வானொலி, சினிமா, தொலைக்காட்சி, பத்திரிகை என்பன இந்தக் கடமையை நிறைவேற்றுகின்றனவா? வானொலியும் தொலைகாட்சியும் அரசின் கையில் இருக்கின்றன. ஏனைய சாதனங்கள் அரசிடமும் தனியார் வசமும் இருக்கின்றன. பத்திரிகைகள், இனங்களுக்கிடையே ஒருமைப்பாட்டுணர்வை ஏற்படுத்துவதில் பங்களிப்பு செய்வது மிக அருமையே ஒருமைப்பாட்டுணர்வை விடுவோம்-கசப்புணர்வை ஏற்படுத்தாமல் இருந்தால் அதுவே சிறந்த பணியாகும் அல்லவா?

அண்மையில் ஒரு தேசிய சிங்களப்பத்திரிகை '40 கோடி ரூபாய்களை நாட்டிலிருந்து கடத்திய முஸ்லிம் வியாபாரி' என்று முதற்பக்கத்தில் கொட்டையெழுத்தில் தலைப்பு போட்டிருந்தது. இவ்வாறு இனத்தை சுந்திக்கு இழுப்பதனால் அந்த செய்திக்கு ஏதாவது பெறுமதி ஏற்படுகிறதா? முஸ்லிம்கள் மாத்திரம்தானா கள்ளக் கடத்தல் புரிகிறார்கள்? ''பார்ஸல் குண்டு அனுப்பிய சிங்களவர்'' என்றோ 'வரிசெலுத்தாது டிமிக்கி கொடுத்த சிங்களக் கோடீஸ்வரர்' என்றோ பெரும்பான்மை இனத்தை சுட்டி இப்பத்திரிகை எப்போதாவது தலைப்பு எழுதியுள்ளதா?

இது விஷமத்தனமான வேலை என்பதும், இனங்களுக்கிடையே கசப்பினை விதைக்கின்ற திட்டமென்பதும் இவற்றிலிருந்து புரிகின்றதல்லவா? இதே பத்திரிகைதான் சில காலங்களுக்கு முன்பு முஸ்லிம்களை அவமதிக்கும் தொடர்கதையொன்றைப் பிரசுரித்து 'மரக்கலஜாவரம் காரயா' என்று பிரயோகித்தும் வந்தது. இரண்டொரு வாரத்துக்கு முன்பு இதன் சகோதர ஆங்கிலப் பத்திரிகை ஒரு முஸ்லிம் நங்கையின் (இப்படித்தான் பெயர் இருந்தது) கவர்ச்சிக்கோலத்தை வர்ணத்தில் படம் பிடித்து அட்டையில் பிரசுரித்திருந்தது. அந்த அம்மணி தனது அரை நிர்வாணத்தைக் காட்டியதோடு தனது சமூகத்தையும் காட்டிக் கொடுக்க இந்தப்பத்திரிகை 'அரிய வாய்ப்பை' வழங்கியிருந்தது.

தொலைக்காட்சி அரசின் கையில் இருப்பதால் இனக்குரோதம் ஊட்டும் நிகழ்சிகள் குறைவு எனலாம். ஆனால் முஸ்லிகளுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை என்பதும் மட்டும் உண்மை

வளர்பிறை, மஜ்லிஸுல் இஸ்லாம் என்பன சமயம் சார்ந்தவை, சைவநீதியும் அவ்வாறே. இவை தவிர தமிழ் பேசுவோர்க்குரிய பொது நிகழச்சியான கலையரங்கம், வாத்தியவிருந்து, காதம்பரி என்பவற்றில் முஸ்லிம்களுக்கு வாய்ப்பு கிடைப்பது மிக அரிது.

இன்னுமொருபுறக்கணிப்பும் நினைவுக்கு வருகிறது. 'ரஸ கலஸ' என்ற சிங்கள டி. வி. நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட போது 'இலங்கையில் சிங்கள சங்கீதத்தின் முன்னோடிகள்' பற்றி ஒரு பேட்டி நடந்தது. ரூபலிங்ஹ மாஸ்டர் போன்றவர்களை தூக்கிப் பிடித்தவர்கள். இப்ருஹிம் மாஸ்டர் பற்றியோ, இசையமைப்பாளர் கவுஸ் மாஸ்டர் பற்றியோ, இன்று நம்மத்தியில் வாழும் லத்தீப்பாய் பற்றியோ ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை.

திரு. சுமித் பீரிஸை டணயக் கைதியாகப் பிடித்த குழுவினர் பற்றி அண்மையில் டி. வி.யில் குறிப்பிட்டபோது தமிழ்ச் செய்தியில் பிலிப்பைன்ஸ் கிளர்ச்சிகாரர்கள் என்றும் சிங்களச் செய்தியில் 'முஸ்லிம் தீவிரவாதிகள்' என்றும் வெவ்வேறாகப் பிரயோகிக்கப்பட்டது. அந்தச் செய்திக்கு முஸ்லிம் என்ற அடைமொழியை அதுவும் சிங்களத்தில் சேர்த்துக் கொண்டதன் மர்மம் என்னவாக இருக்கமுடியும்?

அரசின் கீழ் உள்ள சாதனமொன்று இப்படி நடந்து கொள்வது மன்னிக்கமுடியாதது

சிங்கள சினிமாப் படங்களில் ஒரு முஸ்லிம் பாத்திரம் வருமாயின் தொப்பியணிந்த பெரு வயிறனை குரூரமும் மடத்தனமும் கொண்டவனாக சித்தரிப்பதே வழக்கம் இப்பாத்திரத்தின் மூலம் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையினரின் கசப்புணர்வுக்கும், ஏளனத்துக்கும் உட்படுத்தப்பட்டு வந்துள்

(27ம்பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லையோ அவையெல்லாம் சிருஷ்டித்துக் கொள்ளும் சக்தி மனிதனிடத்து உண்டு என்பதை எல்லோருக்குமே எடுத்துக் கூறி தன்னம்பிக்கையை ஊட்டுவான்.

ஒரு குழந்தையைக் கூட எவ்வாறு வளர்க்க வேண்டும்? என்றவனுக்கு தன்னுடைய சிந்தனைகளை விஸ்தரித்திருந்தான் குழந்தைகளைக்கண்டால் உடனே முழிப்பான்: அவர்களுக்கு அடிப்பான்; அவர்கள் தமக்குவிரும்பிய ஏதாவது பொருளைக் கேட்டால் உடனடியாககொடுக்கமாட்டான் அவர்களுடைய முயற்சியாலேயே அப்பொருளைபெறப்பண்ணுவான் யாராவது ஏன் இவ்வாறெல்லாம் செய்கிறாய்?எனக்கேட்டால்'குழந்தைகளை அன்போடு வளர்க்கத்தான் வேண்டும்; அதற்காக, அவர்களை செல்லமாக வளர்த்து கோழைகளாக்கி விடக்கூடாது'' என உறுதியோடு சொல்லுவான்' இவனுடைய இத்தகைய நடவடிக்கைகளாலே, குழந்தைகளால் இவன் '' சொத்தி '' ''மொக்கன்'' ''முனியான்டி'' என செல்லமாக அழைக்கப்பட்டான்.

பெண்களை அவன் பெண்களாகப் பார்க்காது '' மானுடத்தின் ஒரு உயிர் '' என்றே பார்ப்பான். பெண்களுக்கான மதிப்பையும், சுதந்திரத்தினையும் என்றுமே அளிப்பான். ஒரு பெண் எதற்கும், எடுத்தவுடன் கண்ணீர் சிந்துவதாலேயே, 'அவள்பலவீனமாக இருக்கிறாள்'' என கண்ணீர் சிந்தும் பெண்களைப் பார்த்து கூறியுள்ளான். அழுபவர்களைக் கண்டால் பரிகசிப்பான். ''பெண்களுக்கு அழுவதென்றால் பிரியம் போலும்; ஏனெனில், அவர்கள் ஆனந்தமாயிருந்தாலென்ன. துக்கமாயிருந்தாலென்ன அழுகிறார்களே! '' என நகைச்சுவையோடு கூறுவான். இவன் சிரித்துச்சிரித்து விளையாட்டாய்ப் பேசினாலும் அவன் இதயத்தில் என்றுமே தன்னுடைய மக்களைப்பற்றிய நினைவுகள் இருக்கும்.

இவன் ஒரு சோக்கிரட்டீஸ். ஏனெனில், இவனது சிந்தனைகள் ஆழமானவை ; அர்த்தமானவை. இவனுடைய சிந்தனைகள் விஞ்ஞான பூர்வமான சோஷலிஸத்தையே தேடித் தேடி பார்த்தன.

இலங்கை இராணுவத்தினால் இவன் கடுமையாக தேடப்படுபவன். இராணுவத்தினர் இவனைத் தேடி இவனது வீட்டையே சல்லடைபோட்டுத் தேடினர். இருந்தும் கூட இந்த மக்களின் பிரச்சினைகளிலிருந்து அவன் தப்பித்துக்கொள்ள நினைக்கவில்லை; இந்த மக்களின் அவலங்களோடு, இந்த மண்ணின் ஓசைகளோடு வாழவே விரும்பினான். ஈற்றில் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டபோது, ஒரு போராளிக்குரிய வீரமரபோடு தன்னைத்தானே அழித்துக் கொண்டான். இவன் இந்த மண்ணில் பதித்த சுவடுகள் எமக்கெல்லாம் படிக்கற்கள்!

**அவனது உதடுகள்தான் செத்துப்போயின ஆனால் அவன் உரைத்த வாசகங்கள் இன்னும் வாழ்பவர்களின் இதயங்களிலெல்லாம் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும்.**

## தொடர்பு....

(26ம் பக்க தொடர்ச்சி)

ளது.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதில் ஓரளவாவது பங்களிப்பு நிகழ்ந்துள்ளதென்றால் அவை இடது சாரிகளது முயற்சிகளே என்று குறிப்பிடலாம். ஜூலை சம்பவங்களின் பின்பு சிறுபான்மையினரது பாதிப்புகளையும், இனரீதியான மதிப்பீடுகளையும் தயக்கமின்றி வெளியிட்டவர்களும் இவர்களே. லங்கா கார்டியன், மாவத்தை லங்காத, விமஸும போன்ற இடதுசாரிபத்திரிகைகள் நியாயத்தை துணிந்து வலியுறுத்தி வருகின்றன. கடந்த வெஸாக் தினத்தன்று டி.வி.யில் ஒளிபரப்பான -ஸந்தக்க காதவ (ஒரு நிலவின் கதை) இன ஐக்கியத்தைவலியுறுத்துவதாகஅமைந்திருந்தது. இச்சிறு நாடகம் கூட இடதுசாரிக் கலைஞர்களது அறுவடையே.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன வெறும் கோசமாக காற்றில் கலப்பதில் பயனில்லை. பொதுஜனத் தொடர்பு சாதனங்கள் இதற்கான பங்களிப்பை வழங்க வேண்டும் இனக் கசப்பை ஏற்படுத்தும் பத்திரிகைகளுக்கு அரசு வாய்ப்பூட்டு போட முன்வர வேண்டும்

தார்மீகம் என்பது அப்போது தான் நடைமுறையில் அர்த்தமுள்ளதாக அமையும்.

---

சிலருக்கு இன்றைய சூழ்நிலையில் இயக்கங்கள் தாங்களே தண்டனை வழங்கி வருகிறார்கள் அப்படியானால் ஏன் இந்த இயக்கங்கள் சற்குணராசாவின் (பணம்) கொலைக்கு உரிமைகோரவில்லை ஆகவே இக்கொலையில் ஏதோ சூழ்ச்சி நடைபெற்றிருக்கலாமென நாம் சந்தேகிக்கிறோம்........ சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிக்கும்படியும் அதன் உண்மை விபரங்களை பொதுமக்களுக்கு அறிவிக்கும்படியும் நாம் இயக்கங்களை கேட்டுக் கொள்கின்றோம். இக்கொலை சம்பந்தப்பட்டவர்களை கண்மூடித்தனமாக கைவிட்டால் இயக்கங்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்னும் கொள்கையில் மக்களுக்கு நம்பிக்கையற்றுப் போய்விடும்.

—ஆரியகுளம் பொதுமக்கள்—

(ஏன் இந்த மௌனம், யார் செய்த கொலை? எனும் பிரசுரத்திலிருந்து)

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தளிர் அவதானிகள் பார்வையில்

'வார்த்தைகளிலோ சோஷலிஸ மணம் கமழுகின்றது செயல்களிலோ பிண நாற்றம் வீசுகின்றது' என்று புதைகுழிகள் பேசுகின்றன. துப்பாக்கிகளால் முரண்பாடுகளை தீர்க்ககூடாதென்று தோழர் தலைவர்கள் கூறுகிறார்கள் ஆனால் தோழர்களோ புதைகுழிகளில் தள்ளப்படுகிறார்கள் ஓ! தலைவர் தோழர்களே! ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் 19ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வேலை நேரத்தைக் குறைக்குமாறு போராடிய போராளிகள்மீது அரசு துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது அதில் சூடுபட்ட ஒருவன் எங்கள் வார்த்தைகளை விட எங்கள் கல்லறைகளின் மௌனம் அதிகம் பேசும்' என்று கூறினான்' ஓர் நூற்றாண்டு கழிந்தும் அவர்களுடைய போராட்டம் வெற்றி பெற்றது. வேலை நேரம் குறைந்தது ஓர் நூற்றாண்டு கழிந்தும் அந்தக் கல்லறை இன்றும் பேசிக்கொண்டுதானிருக்கின்றன.

ஆயுதபலத்தினால் எதையும் சாதிக்கலாமென்று எண்ணிய ஹிட்லர், முசோலினி, யஹ்யாகான், [illegible] போன்றோருக்கு என்ன நடந்தது. இவர்களை விடவுமா உங்கள் ஆயுதபலங்கள் பெரிது. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தைக் கட்டி வைத்திருந்த பிரித்தானிய சாம்ராஜ்ஜியமே மக்கள் குரல் முன்பு அஸ்தமித்துப் போனதை ஞாபகத்தில் வைத்திருங்கள். இது பொய்யல்ல; வரலாறு. வரலாற்றில் இப்படியான நீங்களும் விதிவிலக்காக முடியாது.

மரணதண்டனைகளைநிறைவேற்றும் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள். இயேசுநாதர் சிலுவையில் அறையப்படும் பொழுது "இவர்கள் அறியாமையால் செய்யும் தவறுகளை ஆண்டவரே பொறுத்தருள்வீராக" என்று வேண்டினார். அவ்வாறு நீங்களும் அறியாமையால்தான் பசப்பு வார்த்தைகளை நம்பி உங்கள் தோழர்களை நீங்கள் புதைக்கிறீர்கள். ஆனால், உங்களை ஆணையிடுபவர்களோ அறிந்துதான் ஆணையிடுகிறார்கள். எனவே நீங்கள் தோழர்களுக்கு மரணதண்டனைகளை நிறைவேற்றும் பொழுது உங்களுக்கும் சவக்குழி தோண்டுகிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். தோழர்களை சுட மாட்டோம்என்று மறுங்கள் லெனின் கூறிய ஒரு வார்த்தையை உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம். ஒரு குறிப்பிட்ட போதனை ஆழ்ந்தமுறையில் தவறானது; தீங்கு விளைவிப்பது என்று கட்சியைச் சேர்ந்த ஒருவன் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டபின் அந்தப் போதனையை எதிர்ப்பதற்கு அவன் கடமைப்பட்டவன் ஆகின்றான்'. இந்த வகையில் சகல இயக்கங்களையும் சேர்ந்த் சகல தோழர்களும் இயக்கங்களுக்குள்ளான கொலை, இயக்கங்களை விட்டு விலகியமைக்கான கொலை, இயக்கங்களுக்கிடையிலான கொலை போன்றவற்றை எதிர்த்து சரியான கருத்து சுதந்திரத்துக்காக, இயக்கங்களை முற்போக்காக முன்னேற்றுவதற்காக போராடவேண்டும்.

சகல இயக்கங்களினதும் தோழர்களே! சோஷலிஸம் என்பது வெறும் வார்த்தையல்ல; அது ஒரு முறைமை; அது ஒரு புதிய கலாச்சாரம். சகல இயக்கத் தோழர்களும் சோஷலிஸ கலாச்சாரத்தை பிரதிபலிப்பவராக செயற்படவேண்டும். அரசியல் பண்பாடு அதில் மிளிர்ந்திருக்கவேண்டும். மற்றைய இயக்கத் தோழர்களோடும், மக்களோடும் மிக பண்பாகவும், கண்ணியமாகவும் பழகவேண்டும். ஒவ்வொருகணமும் நீங்கள் சோஷலிஸத்தின் பிரதிநிதிகள், முன்னோடிகள் என்பதை மக்கள் நம்பவேண்டும். மிகப் பரந்தளவில் சோஷலிஸ கலாச்சாரத்தை கைக்கொள்ளவேண்டும். அப்போது தான் சோஷலிஸம் இந்த மண்ணுக்கு வரும்; அல்லது காடைத்தனம் தான் மிஞ்சும். இன்று பொதுவாக சகல இயக்கத் தோழர்களும் சுத்தஇராணுவக் கண்ணோட்டத்திற்குள்ளும், குழுவாத கண்ணோட்டத்திற்குள்ளும் சிக்குண்டு கிடக்கின்றனர். இவ்விரு விலங்குகளிலிருந்தும் நாம் முதலில் விடுதலை அடையாது விட்டால் தமிழீழத்தை விடுவிக்கமாட்டோம். எனவே விடுதலைக்கு முன் சகல தோழர்களிடமும் இன்னொரு விடுதலையை வேண்டிநிற்கின்றோம்.

இறுதியாக, ஒரு வார்த்தை. துப்பாக்கிகளின் உறுமல் சில மைல் தூரம் தான் கேட்கும். ஆனால், கல்லறைகளின் மௌனமோ கண்டங்களையும் கடந்து கேட்கும்; காலம் காலமாக நின்று பேசும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவர்ச்சிமிகு நவீன ஆடைகளுக்கும்
உயர்ந்தரக வெளிநாட்டு சாறி வகைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்!

# கணேசானந்தாஸ் சில்க் பலெஸ்

15, மக்கள் நவீன சந்தை
**யாழ்ப்பாணம்**

தொலைபேசி 23043,

எல்லாரக பலசரக்குச் சாமான்களுக்கும்
நாடுங்கள்!

# சிவகுமார் ஸ்ரோர்ஸ்

282, ஆஸ்பத்திரி வீதி
**யாழ்ப்பாணம்**

தொலைபேசி *23738*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"புரட்சி என்பது
பிள்ளை பிடிப்பது போல
கொடுமையல்ல;
பிள்ளை பெறுவது போல்
புனிதமானது."

சித்தி ரேட் சென்ரர்
கொழும்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்